# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 08 வள்ளுவர் ஆண்டு 2055 தை 25 வியாழக்கிழமை 08.02.2024 கதிர் 93


# ரணிலின் கொள்கை உரையினை எதிர்த்து எதிர்க்கட்சிகள் வெளிநடப்பு

## நேற்று நாடாளுமன்றத்தில் புதிய அனுபவம்

ஜனாதிபதிரணில்விக்கிரமசிங்கவின் கொள்கைப் பிரகடன உரையை எதிர்த்து எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தலைமையிலான குழுவினர் நேற்றுநாடாளுமன்றத்திலிருந்து வெளிநடப்புச் செயய்

ஜனாதிபதிரணில்விக்கிரமசிங்க நேற்றுமுற்பகல்நாடாளுமன்ற கூட்டத்தொடரைத் தொடக்கி உரையாற்றத் தொடங்கிய சந்தர்ப்பத்தில், எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச உள்ளிட்ட ஐக்கிய மக்கள் சக்தி உறுப்பினர்கள் சிலர் சபையில் இருந்து வெளியேறினார்கள்.

எனினும், ஐக்கிய மக்கள் சக்தி ஊடாக நாடாளு ☞ 2

# இனி இது ரகசியம் அல்ல!

இந்தியா திடீரென்று ஜேவிபியின் உயர் மட்டக் குழுவினரை வலிந்து அழைத்துச்சந்தித்திருப்பதுபலரையும் புருவத்தை உரயர்த்தவைத்துள்ளது. திடீரென்று ஏன் இத மாற்றம் என்பதே பல இடங்களிலும் பேசுபொருளாக இருக்கின்றது.

சோழியன் குடுமி சும்மா ஆடாது என்பதைப் போன்று இந்தியாவின் நடவடிக்கைகளுக்குப் பின்னால் மிக முக்கியமான காரணம் உள்ளது என்று சுட்டிக்காட்டுகிறார்கள் அரசியல் அவதானிகள். ;

அடுத்து வரும் தேர்தல்களில் ஜேவிபி ஜனாதிபதிப் பதவியையும் ஆட்சியையும் பிடிக்கக்கூடும் என்று கருத்துக்கணிப்புக்கள் கூறி வருகின்றன. ஒருவேளை அப்படி ஏதாவது நடந்தாலும் என்று கருதிய புதுடில்லி அதற்கு ☞ 2

# ஜே.வி.பி. குழு இந்தியாவில் குஜராத் முதல்வருடன் சந்திப்பு

இந்தியா சென்றுள்ள ஜே.வி.பியின் தலைவர் அனுரகுமார திசாநாயக்க உள்ளிட்ட குழுவினர் இந்தியாவின் குஜராத் மாநில முதலமைச்சர் பூபேந்திரபாய்பட்டேலைசந்தித்துள்ளனர்.

குஜராத்தின் சட்டசபை கட்டடத் தொகுதியில் நேற்று நடைபெற்ற இந்தச் சந்திப்பில் குஜராத் மாநிலத்தில் வறுமையைஒழிப்பதற்கானஅபிவிருத்தி மூலோபாய திட்டங்கள் மற்றும் பிராந்தியத்தின் நிர்வாக செயற்பாடுகள் ஆகிய விடயங்கள் தொடர்பில் ☞ 11

# ஒற்றுமைக்கு வருமாறு அழைக்கும் ரணில் சபைக்கு வெளியே தாக்குதல்

## லக்ஷ்மன் கிரியயல் குற்றச்சாட்டு

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கஒற்றுமைப் படுமாறு நாடா-ளுமன்றத்தில் கோரிக்கை முன்வைக்கிறபோதும் சபைக்கு வெளியே அவர்களைத் தாக்குகின்றாரன்றுஎதிர்க்கட்சியின் பிரதமகொறடாலக்ஷ்மன் கிரியெல்ல தெரிவித்தார்.

ஜனாதிபதியின் கொள்கைப் பிரகடன உரை புறக்கணிப்பு தொடர்பில்நாடாளுமன்ற வளாகத்தில் ஊடகவியலாளர்களிடத்தில்கருத்து வெளியிடும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

அண்மைக் காலமாக ஆளும் தரப்பு மேற்கொண்ட சில நடவடிக்கைகளுக்கு எதிர்ப்புதெரிவிக்கும்வகையில்,புறக்கணிப்புநடவடிக்கையை மேற்கொண்டோம். ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நாளாந்தாம்எம்மிடத்தில் ஒத்துழைப்பினைக் கோருகின்றார்கள். தமக்குஒத்துழைப்பினை வழங்குமாறு தொடர்ச்சியாகக் கோருகின்றார்.

ஆனால் அண்மையில்நடைபெற்றதைப் பாருங்கள். அமைதியான எதிர்ப்பு ☞ 11

# நிகழ்நிலை காப்புச் சட்டத்துக்கு அப்படி என்ன அவசரம் வந்தது?

## மாற்றுக்கொள்கைகளுக்கான நிலையம் கேள்வி

நிகழ்நிலை காப்பு சட்டம் தொடர்பான வரைபை நாடாளுமன்றத்தில் முன்வைப்பதிலும் நிறைவேற்றுவதிலும்ஆளும்தரப்புக்கு அவ்வளவு அவசரம் எதற்கு என்று மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் கேள்வி எழுப்பியுள்ளது.

மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் வெளியிட்டுள்ளஅறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

நிகழ்நிலைச் சட்டம் நிறைவேற்றப்பட்ட செயற்பாடுகளின் ஊடாக அரசாங்கத்திற்கு சட்டத்தை நிறைவேற்றுவதற்கு இருந்த உண்மையான தேவை மற்றும் அரசியல் ☞ 2

# தமிழர் தேசத்தை மிக வேகமாக அழிப்பதில் இலங்கை தீவிரம்

## அமெரிக்க செனட் உறுப்பினர்களுக்கு விளக்கம்

தமிழர்களின் தேசத்தினை மிக வேகமாக இல்லாதொழிக்கின்ற செயற்பாடுகள் தீவிரமாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. பௌத்த மயமாக்கல், அபிவிருத்தியின் பெயரில் தமிழர்களின்நிலங்களை பறித்து சிங்கள குடியேற்றங்களை மேற்கொள்ளுதல், தமிழர்களின் பூர்வீகநிலங்களில்இருந்து தமிழர்களை பாரிய அபிவிருத்தியின்பெயரால் வெளியேற்றுதல், அடிப்படை உரிமைகளான பேச்சு சுதந்திரம், நினைவுகூருகின்ற சுதந்திரம், கருத்து வெளியிடுகின்ற சுதந்திரம் ஆகிய ஜனநாயக விரோதமான செயற்பாடுகளை தமிழர்களுக்கு எதிராக முன்னெடுத்தல், உள்ளிட்ட செயற்பாடுகளே ☞ 2

# இலங்கையைக் கட்டியெழுப்ப அனைவரும் இணையுங்கள்

## ரணில் நேற்று மீண்டும் அழைப்பு

நாட்டைக் கட்டியெழுப்பும் கனவை நனவாக்க அனைவரும் ஒன்றிணைய வேண்டுமெனமீண்டும்கேட்டுக் கொள்கின்றேன். அதற்காக ஒற்றுமையாக கலந்துரையாடுவோம். நாங்கள் செயல்படுத்தும் முறையை விட சிறந்த மாற்று முறைகள் இருந்தால், அவற்றைக் கூறுங்கள். அவற்றை ஆழமாகப்ஆராய்வோம். அது குறித்தும் கலந்துரையாடுவோம். அவற்றில் நாட்டுக்குச் சிறந்தென கருதப்படும் யோசனையைச் செயற்படுத்துவோம். அவ்வாறான பேச்சுக்களில் கலந்துகொள்ள நாம் தயாராகவே இருக்கிறோம் என்று ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தெரிவித்தார்.

ஒன்பதாவது நாடாளுமன்றத்தின் ஐந்தாவது கூட்டத் ☞ 2

# வடக்கிலுள்ள உப்பளங்கள் மூலம் ரூ. 100 மில்லியன் திறைசேரிக்கு

## இராஜாங்க அமைச்சர் சாமர சம்பத் தெரிவிப்பு

ஆனையிறவு மற்றும் மன்னார் உப்பளங்கள் மூலம் இலாபம் ஈட்டி 100 மில்லியன் ரூபாவை திறைசேரிக்கு வழங்கினோம்என்றுஇராஜாங்க அமைச்சர் சாமர சம்பத் தசநாயக்கதெரிவித்தார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே நேற்று அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

நாடுபெரும்பொருளாதாரநெருக்கடியில்இருந்த வேளையில் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க இந்த நாட்டைப் பொறுப்பேற்றார். இப்போது அந்தப் பொறுப்பை வெற்றிகரமாகநிறைவேற்றி வருகிறார்.

அத்துடன், என்னிடம் ஒப்படைக்கப்பட்ட அமைச்சுக்குச் சொந்தமான நிறுவனங்களும் கடும் வீழ்ச்சியைச் சந்தித்திருந்தன. ☞ 8

# சிறுவர்கள், இளையோர் கட்டளைச் சட்ட திருத்தங்கள் திருப்தியாக இருக்கின்றன

## யுனிசெப் அறிவிப்பு

சிறுவர் உரிமைகள் மற்றும் இளையோர் கட்டளைச் சட்டத்தில் மேற்கொள்ளப்பட்டுள்ள திருத்தங்கள் இலங்கையின் சிறுவர் உரிமைகளுக்கானஒருமைற்கலாக இருப்பதுடன், அது ஒவ்வொரு பிள்ளையினதும் உரிமைகள் மற்றும் கண்ணியத்தை நிலைநிறுத்தும் நீதி முறைமையாகஇருக்கும் என்பதில் ஐயமில்லை. மேலும், இலங்கையில் சகல சிறுவர்களுக்கும் பாதுகாப்பான சூழலை ஏற்படுத்திக்கொடுப்பதற்கு நாம் அர்ப்பணிப்புடன் செயற்பட்டுக் ☞ 11

# மக்கள் ஐக்கிய முன்னணியின் தலைவராக மீண்டும் சந்திரிகா



பொது மக்கள் ஐக்கிய முன்னணியின் தலைமைத்துவசபையின் தலைவராக முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்கவை நியமிப்பதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக சிறீ லங்கா சுதந்திரக் கட்சியின் ஊடகப்பேச்சாளர் திஸர குணசிங்க தெரிவித்தார்.

பொது மக்கள் ஐக்கிய முன்னணியின் யாப்பு மாற்றம்தொடர்பில்நேற்று முன்தினம் இடம்பெற்ற நிறைவேற்றுக்குழு கூட்டத்தின் போது இந்த தீர்மானம் எடுக்கப்பட்டதாக அவர் தெரிவித்தார்.

சிறீலங்கா சுதந்திரக் கட்சியின் கதிரைச் ☞ 2

# சபாநாயகருக்கு எதிரான தீர்மானம் வெகு விரைவில் நாடாளுமன்றத்தில்

## பேராசிரியர் பீரிஸ் தெரிவிப்பு

சகல எதிர்க்கட்சிகளுடன்கலந்துரையாடி சபாநாயகருக்கு எதிராக வெகுவிரைவில் நம்பிக்கையில்லா பிரேரணையைகொண்டுவருவோமென பாராளுமன்ற உறுப்பினர் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ்தெரிவித்தார்.

நாடாளுமன்ற கட்டிடத் தொகுதியில் உள்ள எதிர்க்கட்சித் தலைவர்அலுவலகத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:

நாட்டு மக்களின் மீது ஒட்டுமொத்த வரி சுமைகளையும்திணித்துவிட்டு பொருளாதாரமீட்சிக்கான நடவடிக்கைகளை முன்னெடுப்பதாக ஜனாதிபதி குறிப்பிடுகிறார். ☞ 2

காலைக்கதிர் Kalaikkathir

## இனி இது .....

முன்னதாக ஜேவிபியுடனான உறவைப் பலப்படுத்திக் கொள்ளத் தீர்மானத்தித்ததன் விளைவாகவே ஜேவிபியினர் இந்தியாவுக்கு அழைக்கப்பட்டதற்கான காரணம் என்றும் சொல்லப்படுகின்றது.

ஜேவிபி அடிப்படையில் இந்திய எதிர்ப்புக் கொள்கையை உடைய கட்சி. இந்திய இராணுவத்தினர் இலங்கைக்குள் வந்தமைக்கு எதிர்ப்பைக் காட்டுவதன் மூ-லமே அந்தக் கட்சி தெற்கில் அரசியல் களத்தில் தன்னை வலுப்படுத்திக்கொண்டது. இப்போதும் அது இந்தியஎதிர்ப்புஅரசியலையேதனது அணுகுமுறையாக வைத்துள்ளது.

புதுடில்லியின் அழைப்பை ஏற்று ஜேவிபி இந்தியா சென்றிருப்பதன் பின்னணியில், தான் ஆட்சிக்கு வருவதை புதுடில்லி தடுத்திவிடக்கூடாது என்கிற முன்னச்சரிகைநோக்கத்தோடுதான் ஜேவிபியினர் புதுடில்லிக்குச் சென்றுள்ளனர் என்றும் சொல்லப்படுகின்றது.

இவற்றுக்கு மேலாக இலங்கையின்ஆளும்தரப்புக்கள்ஏற்கனவே சீனச் சார்பு நிலையை எடுத்துள்ள பின்னணயில் ஒருவேளை ஜேவிபியும் ஆட்சிக்கு வந்ததும் சீனாவின் பக்கம் முழுமையாகச் சாய்நந்துவிடுமோஎன்கிறஅச்சமுமே புதுடில்லி ஜேவிபியை தன்னிடம் அழைப்பதற்கான காரணங்களில் ஒன்றுஎன்றும்சொல்லப்படுகின்றது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இந்தியாசென்றுபிரதமர்மோடியைச் சந்திப்பதற்கு பல வருடங்களாகவே அழைப்பு வழங்க மறுத்து வரும் இந்தியா ஜேவிபியை வலிந்து அழைத்து ராஜ மரியாதை செலுத்துவதன் பின்னணியில் காரணங்கள்இருக்காமலாபோகும்?

**இடிமின்னல்**
(idiminnal@gmail.com)

## ரணிலின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மன்றத்திற்கு தெரிவான ராஜித்த சேனாரத்ன, பாட்டலி சம்பிக்க ரணவக்க, ஃபீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா, இஷாக் ரஹ்மான், யு.ர்.ஆ. பௌஸி, சுயாதீன உறுப்பினராக செயற்படும் குமார வெல்கம ஆகியோர் சபையில் தொடர்ந்தும் அமர்ந்திருந்தனர்.

ஐக்கிய மக்கள் சக்தியுடன் கூட்டணி அமைத்துள்ள நாடாளுமன்றஉறுப்பினர்மனோகணேசன் தலைமையிலானதமிழ் முற்போக்குக் கூட்டணியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் இன்றைய சபை நடவடிக்கைகளில் கலந்துகொள்ளவில்லை.தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அனுரகுமார திசாநாயக்க, நாடாளுமன்ற உறுப்பினர் விஜித்த ஹேரத் ஆகியோர் வெளிநாடு சென்றுள்ள நிலையில், கலாநிதி ஹரினி அமரசூரிய ஜனாதிபதி உரையாற்றியபோது சபையில் பிரசன்னமாகியிருந்தார்.

இலங்கை தமிழரசுக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்களில் சார்ள்ஸ் நிர்மலநாதன் மற்றும் தவராசா கலையரசன் ஆகியோர் மாத்திரமே சபையில் இருந்தனர்.

## சபாநாயகருக்கு ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

புதிய பாராளுமன்றகூட்டத்தொடரை ஜனாதிபதி ஆரம்பித்து வைத்து கொள்கை பிரகடனம் உரையாற்றியுள்ளார்.

ஒன்பதாவதுபாராளுமன்றத்தின் நான்காவது கூட்டத்தொடரை ஆரம்பித்து வைத்த போது ஜனாதிபதி ஆற்றிய உரையில் குறிப்பிட்ட விடயங்கள் ஏதும் நிறைவேற்றப்படவில்லை.

இவ்வாறான நிலையில் நான்காவது கூட்டத்தொடரை ஒத்திவைத்து ஐந்தாவது கூட்டத்தொடரை ஆரம்பித்துகடந்தஆண்டுகுறிப்பிட்ட விடயங்களையே தற்போதும் குறிப்பிட்டுள்ளார்.

நான்காவது கூட்டத்தொடர் ஒத்திவைக்கப்பட்டதால் பாராளுமன்றத்தில் உள்ள 91 குழுக்களில் 64 குழுக்கள் கலைக்கப்பட்டுள்ளன.மீண்டும் புதிதாக குழுக்கள் நியமிக்கப்பட வேண்டும்.

ஆகவே ஜனாதிபதியின் செயற்பாடுகளினால் அரச நிதியும்,காலமும் வீண்விரயமாக்கப்பட்டுள்ளது. அரச நிதி மோசடி குறித்து முன்னெடுக்கப்பட்ட விசாரணைகள் அனைத்தும் இடைநிறுத்தப்பட்டுள்ளன.ஆகவே ஊழல் மோசடிக்கு ஒத்தாசை வழங்கும் வகையில் ஜனாதிபதி செயற்பட்டுள்ளார்.

நாட்டில்சுதந்திரமானமுறையில் தேர்தலைநடத்துவதற்கானசூழலை முடக்கும் வகையில் பாரதூரமான சட்டங்கள் இயற்றப்பட்டுள்ளன. நிகழ்நிலை காப்புச் சட்டத்தினால் நாட்டு மக்களின் பேச்சு உரிமை முடக்கப்பட்டுள்ளது.மறுபுறம் உத்தேச பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

சபாநாயகரின் செயற்பாடுகள் முறையற்றவை.இவருக்கு எதிராக நம்பிக்கையில்லா பிரேரணையை கொண்டு வருவதாக எதிர்க்கட்சித் தலைவர் குறிப்பிட்டுள்ளார்.சகல எதிர்க்கட்சிகளுடன் கலந்துரையாடி சபாநாயகருக்கு எதிராக வெகு விரைவில் நம்பிக்கையில்லா பிரேரணையைகொண்டுவருவோம் என்றார்.

## தமிழர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தீவிரமாக முன்கெடுக்கப்படுகின்றன என்று அமெரிக்க காங்கிரஸ் உறுப்பினர்களிடத்தில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும், யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்தார்.

அமெரிக்காவுக்குச் சென்றுள்ள கஜேந்திரகுமார் பொன்னம்பலம், அமெரிக்க காங்கிரஸ் உறுப்பினர்களான வில்லி நிக்கில், டிபோத் ரொஸ், ஜம்மி ரஸ்கின், டெனி கே.டேவிஸ் ஆகியோரைச் சந்தித்துப் பேசினார்.

இந்தச் சந்திப்பு தொடர்பில் அவர் தெரிவித்துள்ளதாவது.

இலங்கையின் நல்லிணக்கத்தையும் பொறுப்புக்கூறலையும் வலியுறுத்தும் தீர்மானம் அமெரிக்க காங்கிரஸ் சபையில் நிறைவேற்றப்பட்டது.அந்தவகையில் தமிழர்கள் மீது கரிசனைகளைக் கொண்டுள்ள அவர்களுடனான சந்திப்பில் தமிழர்களின் தற்போதைய நிலைமைகள் தொடர்பில் எடுத்துரைத்தோம்.

விசேடமாக ராஜபக்சக்களின் காலத்தில் தமிழ் மக்கள் மீதும், தமிழர்தேசத்தின்மீதும்கடுமையான திட்டமிட்ட நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன. இந்த நிலையில் தற்போது, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் ஆட்சி முன்னெடுக்கப்படுகின்றது.

இந்தத்தருணத்தில்தமிழர்களின் தேசத்தினை மிக வேகமாக இல்லாதொழிக்கின்றசெயற்பாடுகள் தீவிரமாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. பௌத்த மயமாக்கல், அபிவிருத்தியின் பெயரில் தமிழர்களின் நிலங்களை பறித்து சிங்கள குடியேற்றங்களை மேற்கொள்ளுதல், தமிழர்களின் பூர்வீக நிலங்களில் இருந்து தமிழர்களைபாரியஅபிவிருத்தியின் பெயரால்வெளியேற்றுதல்,அடிப்படை உரிமைகளான பேச்சு சுதந்திரம், நினைவுகூருகின்ற சுதந்திரம், கருத்து வெளியிடுகின்ற சுதந்திரம் ஆகிய ஜனநாயக விரோதமான செயற்பாடுகளை தமிழர்களுக்கு எதிராக முன்னெடுத்தல், உள்ளிட்ட செயற்பாடுகளே தீவிரமாக முன்கெடுக்கப்படுகின்றன. இதனால் நிலைமைகள் நாளுக்கு நாள் மோசமடைந்து வருகின்றன.

அதேநேரம், உள்நாட்டில் பூகோள போட்டித்தன்மை காணப்படுகின்றது. விசேடமாக சீனாவுடன் மேற்குலக நாடுகள் போட்டிபோடுகின்ற தன்மைகள் காணப்படுகின்றன. தமிழர்களுக்கு எதிரானசெயற்பாடுகளைதடுப்பதற்கு பதிலாக அரசாங்கம் சீனாவுடனான விடயங்களை கட்டப்படுத்தும் செயற்பாடுகளையே மேற்கத்தேய நாடுகள்முன்னெடுத்துவருகின்றன.

தற்போது இலங்கை அரசாங்கத்துக்கு பாரிய பொருளாதார நெருக்கடிகள் ஏற்பட்டுள்ள. இதனால் அதற்கு பாரிய நிதி உதவிகள் தேவையாக உள்ளன.

இந்தச் சந்தர்ப்பத்தினை அமெரிக்கா உள்ளிட்ட மேற்குல நாடுகள், இலங்கை அரசாங்கம்தமிழர்களுக்கு சுயநிர்ணய அடிப்படையிலான தீர்வொன்றை வழங்குவதற்கும், பொறுப்புக்கூறலைச்செய்வதற்காக சர்வதேச குற்றவியல் விசாரணையொன்றை முன்னெடுப்பதற்கும்தங்களுடைய அரசாங்கத்துக்கு அழுத்தங்களை வழங்க வேண்டும்என்று கோரியுள்ளேன்.

அத்தோடு. தமிழர்களின் தலைவிதியை தீர்மானிப்பதற்காக சர்வஜன வாக்கெடுப்பொன்றை நடத்துவதோடு, பொறுப்புக் கூறலுக்காவும், இனப்பிரச்சினை தீர்வுக்காவும் தீர்மானங்களை தொடர்ச்சியாகஅமெரிக்ககாங்கிரஸ் நிறைவேற்ற வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டுள்ளேன் என்றார்.

## நிகழ்நிலை ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அமைப்பு மீறப்படுவதற்கான சாத்தியம் வெளிப்படுகிறது.

புதிய சட்டமானது அரசின் தேவைக்கு அமைவாக கருத்து தெரிவிப்பதற்கான உரிமை மற்றும் சட்டத்தின் ஆட்சியை நேரடியாகப் பாதிக்கிறது.

உயர் நீதிமன்றத்தினால் முன்வைக்கப்பட்டபரிந்துரைகளுக்கு அமைவான திருத்தங்களை மேற்கொள்வதற்கு அரசாங்கம் ஆர்வம்காட்டாமைபாரியபிரச்சினை என மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் தெரிவித்துள்ளது.

அரசாங்கம் உயர் நீதிமன்றத்தின் பரிந்துரைகளை தெரிவு செய்து மறுசீரமைப்புக்கு உட்படுத்தியுள்ளமையானது குறித்த சட்டம் அரசியலமைப்பிற்கு அமைவானதா என்ற சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளது.

உடனடியாக இந்த சட்டத்தை மீளப்பெறுவதோடு, உண்மையாக இணைய பாதுகாப்பை ஏற்படுத்துவதற்கான சிறந்த கொள்கைகளை கொண்ட சட்டத்தை உருவாக்க வேண்டும் என்றுள்ளது.

## இலங்கையைக் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தொடரை நேற்றுத் தொடக்கி வைத்து ஆற்றிய கொள்கை விளக்க உரையின்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

நாடாளுமன்ற வளாகத்திற்கு வருகை தந்த ஜனாதிபதியை பிரதமர் தினேஷ் குணவர்தன, சபை முதல்வர் சுசில் பிரேமஜயந்த் மற்றும் ஆளும் கட்சி பிரதம கொரடா அமைச்சர் பிரசன்ன ரணதுங்கஆகியோர்வரவேற்றனர். நாடாளுமன்ற பிரதான வாயில் முன்பாக பாடசாலை மாணவிகள் ஜெயமங்கல கீதம் பாடினர்.

படைக்கல சேவிதர், பிரதி படைக்கல சேவிதர், சபாநாயகர், நாடாளுமன்ற செயலாளர் நாயகம், பிரதிச் செயலாளர் நாயகம் உள்ளிட்டோர் புடைசூழ நாடாளுமன்ற அவைக்குள் பிரவேசித்த ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க, நாடாளுமன்றத்தில் தனது கொள்கை விளக்க உரையை நிகழ்த்தினார்.

அவரது உரையில் தெரிவிக்கப்பட்டதாவது:

தொடக்கம் முதல் இன்று வரை உலகம் பல்வேறு நெருக்கடிகளைச் சந்தித்தது. நாடுகள் நெருக்கடிகளைச் சந்தித்தன. தனிப்பட்ட வாழ்க்கையிலும் நெருக்கடி ஏற்பட்டது. சில சமயங்களில் நெருக்கடியிலிருந்து விடுபட முடிந்தது. வேறு சில சந்தர்ப்பங்களில்,நெருக்கடியிலிருந்து மீள முடியவில்லை. நெருக்கடியைச் சபித்துக் கொண்டிருப்பதன் மூலம் நெருக்கடியிலிருந்து மீள முடியாது. நெருக்கடிக்கான காரணங்களை விமர்சிப்பதன் மூலமும் மீள முடியாது.

நெருக்கடிகளைச் சரியாக நிர்வகிப்பதன் மூலம் தான் உலகமும் நாடுகளும் தனிப்பட்ட வாழ்க்கையிலும் நெருக்கடிகளைத் தீர்க்க முடிந்துள்ளது. நெருக்கடி முகாமைத்துவத்தில் அடிப்படை என்னவாக இருக்க வேண்டும்? புத்தபிரான் போதித்த ஒரு போதனையை இங்கு மேற்கோள் காட்ட விரும்புகிறேன்.

'அத்ததீபா' விஹரத தங்களுக்குத் தாங்களேஒளியாகவாழவேண்டும்.

நெருக்கடியைச் சமாளிக்கும் செயல்முறை தன்னிடமிருந்தே தொடங்க வேண்டும். உலகில் எங்கும் ஏனையவர்களைக் குறை கூறி நெருக்கடியைச் சமாளித்தது கிடையாது.

எம்மை எமக்கான ஒளியாக மாற்றாவிட்டால், நம் எண்ணங்களையும் கருத்துக்களையும் சீர்செய்யாவிட்டால், நமக்கு நன்மை நடக்காது. நாட்டுக்கு எந்த நன்மையும்இல்லை.நெருக்கடிக்கும் தீர்வு இல்லை.

முறைமையில் மாற்றம் இருக்காவிட்டால்'சிஸ்டம்சேஞ்ச்'பற்றி தொண்டைக் கிழியக் கத்தினாலும் நாம் அடிப்படையில் இருந்து மாறாவிட்டால்முறைமையைமாற்ற எம்மால் முடியாது. அதனைச் சுட்டிக் காட்டும் வகையில் கடந்த காலம் , நிகழ்காலம், எதிர்காலம் பற்றிய பல விடயங்களை இச்சபையில் கோடிட்டுக் காட்ட விரும்புகிறேன்.

2022 பெப்ரவரியில் இந்த நாடு இருந்த நிலை, நம் அனைவருக்கும் நினைவில் இருக்கும். 2023 பெப்ரவரி மாதமளவில், இந்த நாட்டை ஒரு சிறந்த நிலைக்கு கொண்டுவர முடிந்தது. இந்தவருடம் பெப்ரவரியாகும்போதுகடந்தஆண்டு

தொடர்ச்சி 10ம் பக்கம்....

### கட்சிகளிலிருந்து ஆள் பிடிப்பதை விடுத்து

# எதிர்க் கட்சித் தலைவருடன் ஜனாதிபதி பேசவேண்டும்

கட்சிகளிலிருந்து உறுப்பினர்களைப் பறித்தெடுப்பதை விடுத்து எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசவுடன் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பேச்சு நடத்த வேண்டுமென சிறீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான ரவூப் ஹக்கீம் தெரிவித்தார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் கொள்கைப் பிரகடன உரை தொடர்பில் நேற்று நாடாளுமன்ற வளாகத்தில் வைத்து கருத்து வெளியிடும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

எதிர்க்கட்சியினர் கொள்கைப் பிரகடன உரையை புறக்கணித்தமையால் நாம் அவருடைய உரை நடைபெற்றபோது சபைக்குள் பிரசன்னமாகவில்லை. இருப்பினும், வெளியில் இருந்தவாறு நாம் அவருடைய உரையை முழுமையாகக் கேட்டுக்கொண்டிருந்தோம். அந்த வகையில் அவர் அனைவரையும் ஒன்றிணைந்து செயற்படுவதற்கு அழைப்பு விடுத்துள்ளார்.

அவ்வாறு அவர் அழைப்பு விடுக்கப்பது நல்ல சமிக்ஞையாக இருந்தாலும் அவர் அவ்வாறு பகிரங்க அழைப்புக்களை விடுத்து கடந்து செல்லாது எதிர்க்கட்சித் தலைவரை அழைத்து பகிரங்கமாக பேச வேண்டும்.

அதேநேரம் வேறுகட்சிகளிலிருந்து உறுப்பினர்களை பறித்தெடுத்து அதன் மூலம் அரசியல் இலாபம் அடையலாம் என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கருதக்கூடாது.

எமதுகட்சியில்இருந்துஒருவரை பறித்தெடுத்து அமைச்சராக்கி ஈற்றில் அவர் அப்பதவியை இழந்தமையையும் ஜனாதிபதி நினைவில் கொள்ள வேண்டும் என்றார்.

# கல்வித்துறை வெற்றிடங்களை நிரப்ப விரைவில் நடவடிக்கை

### கல்வி அமைச்சர் சுசில் உறுதியளிப்பு

கல்வித்துறையில்பலபதவிகளில் காணப்படும் பெரும்பாலான வெற்றிடங்களை நிரப்புவதற்கு அவசியமான நடவடிக்கைகளை விரைவில் எடுக்கவுள்ளதாக கல்வி அமைச்சர் பேராசிரியர் சுசில் பிரேம்ஜயந்த தெரிவித்தார்.

வடமாகாணத்தின் வவுனியா, முல்லைத்தீவு, மன்னார் போன்ற மாவட்டங்களில் கல்வித்துறையின் அபிவிருத்திக்காக அதிபர்கள் மற்றும் மாகாணக் கல்வி அதிகாரிகளைத் தெளிவுபடுத்துவதற்காக கல்வி அமைச்சரின் தலைமையில் வவுனியா கலாசார மத்திய நிலையத்தில் இடம்பெற்ற நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அமைச்சர் இது தொடர்பாக தெளிவுபடுத்தினார்.

இதன்போது தொடர்ந்து உரையாற்றிய அமைச்சர் எதிர்காலத்தில் மிகவும் குறைந்த காலத்திற்குள் கல்வி நிருவாக சேவையில் 460 நியமனங்களை வழங்குவதற்குஅவசியமானஉடனடி ஏற்பாடுகளை மேற்கொள்வதாகவும் அமைச்சர் குறிப்பிட்டார்.

அவ்வாறே சட்ட நடவடிக்கைகளால் 2019 ஆம் ஆண்டு தொடக்கம் தேங்கிக் காணப்படும் அதிபர் சேவையில் புதிய நியமனங்கள் 4,672 தற்போது வழங்கப்பட்டுள்ளதாகவும் அதில் 4,400 அதிபர்கள் தற்போது கடமைகளை பொறுப்பேற்றுக்கொண்டுள்ளதாக அவர் சுட்டிக்காட்டினார்.

இளம்சந்ததியினரின்பலத்துடன் புதியநியமனங்களைப்பெறுபவர்கள் நாட்டின் எந்தப் பிரதேசத்திலும் குறைந்தது மூன்றுவருடங்களாவது பணியாற்றுவதற்கு தயாராக இருக்க வேண்டும் என்றும் குறிப்பிட்டஅமைச்சர்புதியநியமனம் பெறுபவர்களின் நியமனங்களை ஏற்றுக்கொள்வது தொடர்பாக சிக்கல்கள் கலந்துரையாடப்பட்டு பொது உடன்பாட்டிற்குவருவதற்காக சகலதரப்பினரும்கலந்துகொள்ளும் இரண்டு நாள் நிகழ்ச்சி கொழும்பில் இடம்பெறுவதாகவும் அதன்போது எடுக்கப்படும்பொதுத்தீர்மானத்திற்கு இணங்கஅதிபர்சேவையில்ஏனைய நியமன தாரிகளுக்கும் பணியைப் பொறுப்பேற்றுக்கொள்வதற்கு அவசியமான நடவடிக்கைகளை வழங்குவதுடன், அதிகாரிகள் தாம் பணிபுரியும்இடங்களில்பற்றாக்குறை காணப்படும் இடங்களுக்கு இடம்மாற்றம் செய்யப்பட்டு அனுப்பப்பட்டுள்ளதாகவும்அமைச்சர் விபரித்தார்.

ஆசிரிய பயிற்றுனர் சேவையில் புதிய 700 நியமனங்கள் இடம்பெறவுள்ளதுடன் புதிய ஆசிரிய ஆலோசகர் நியமனங்கள் வழங்கப்படவுள்ளதாகவும்அமைச்சர் குறிப்பிட்டார்.

இரசாயன விஞ்ஞானம், பௌதீக விஞ்ஞானம்,உயிரியல்விஞ்ஞானம், கணிதம்,தொழில்நுட்பவியல்மற்றும் வெளிநாட்டு மொழிகள் போன்ற பாடங்களுக்காக வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டு பரீட்சைகள் நடாத்தப்பட்டு 5,500 பேரளவில் புதிய ஆசிரியர்கள் ஆசிரியசேவைப்பிரமாணங்களுக்கு இணங்க ஆட்சேர்ப்புச் செய்வதற்கு உத்தேசிப்பதாகவும் மாகாண மட்டங்களில் அந்நியமனங்களை வழங்குவதற்கு அவசியமான சகல நடவடிக்கைகளும் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதாகவும் தேசிய பாடசாலைகளுக்காக மாத்திரம் பரீட்சைகளை நடாத்தி எதிர்வரும் சில வாரங்களுக்குள் அவ்வாட்சேர்ப்புக்கள் இடம்பெறும் என்றும் அமைச்சர் சுசில் பிரேம்ஜயந்த தெரிவித்தார்.

காலைக்கதிர்
Kalaikkathir

# காணிகள் இல்லாதோருக்கு பூநகரியில் காணி வழங்கல்

## அமைச்சர் டக்ளஸ் நடவடிக்கை



காணியற்ற மக்களுக்கு காணிகளை பகிர்ந்தளித்து மரமுந்திரிகை செய்கையில் அவர்களை ஊக்குவிப்பதற்கு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவால் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

மேற்படி விடயம் தொடர்பாக இடம்பெற்ற அமைச்சரவை கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

பூநகரி, ஜெயபுரம் பகுதியில் மரமுந்திரிகை கூட்டுத்தாபனத்தின் கட்டுப்பாட்டிலுள்ள சுமார் 472 ஏக்கர் காணிகளே கிளிநொச்சி மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் தலைவர் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் முயற்சியால், பிரதேசத்தினை சேர்ந்த காணிகளற்ற மக்களுக்கு பகிர்ந்தளிக்கப்படவுள்ளது.

அதுமாத்திரமன்றி, காணிகளைப் பெற்றுக் கொள்வோர் மரமுந்திரிகை செய்கையில் ஈடுபடுவதற்கான ஒத்துழைப்புக்களை வழங்கவுள்ள மரமுந்திரிகை கூட்டுத்தாபனம், அறுவடை செய்யப்படும் விளைச்சலை நியாயமான விலைக்கு கொள்வனவு செய்வதற்கும் தீர்மானித்துள்ளது.

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் இந்நடவடிக்கை மூலம் பூநகரி, ஜெயபுரம் பகுதியை சேர்ந்த சுமார் 100 குடும்பங்கள் நேரடியாக பொருளாதார நன்மைகளை பெற்றுக் கொள்ள இருப்பதுடன், கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களில் மரமுந்திரிகை பதனிடும் தொழிலில் ஈடுபட்டுள்ளோருக்கு தேவையான மூலப் பொருள்கள் நியாயமான விலையில் தாராளமாக கிடைக்கவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (05)

# தென்கிழக்கு பல்கலை 16 ஆவது பட்டமளிப்பு 10, 11 ஆம் திகதிகளில் ஒலுவில் வளாகத்தில்



(கே.ஏ. ஹமீட்)

தென்கிழக்கு பல்கலைக்கழகத்தின் 16 ஆவது பட்டமளிப்பு விழா எதிர்வரும் 10 மற்றும் 11ஆம் திகதிகளில் பல்கலைக்கழக ஒலுவில் வளாகத்தில் நடைபெறவுள்ளது என உபவேந்தர் பேராசிரியர் றமீஸ் அபூபக்கர் தெரிவித்தார்.

பட்டமளிப்பு விழா தொடர்பில் பல்கலைக்கழக பிரதான சபை மண்டபத்தில் நடைபெற்ற ஊடக சந்திப்பில் கலந்து கொண்டு பேசிய போது, அவர் இதனைக் கூறினார்.

மேற்படி பட்டமளிப்பு விழா, ஒவ்வொரு நாளிலும் தலா மூன்று அமர்வுகளாக நடைபெறும் என்றும், மொத்தமாக 2152 பேருக்கு, இதன்போது பட்டங்கள் வழங்கப்படவுள்ளன எனவும் அவர் குறிப்பிட்டார்.

முதலாம் நாளின் முதலாவது அமர்வில் கலை கலாசார பீடத்தைச் சேர்ந்த 342 பேரும், இரண்டாவது அமர்வில் இஸ்லாமிய கற்கைகள் அரபு மொழி பீடத்தைச் சேர்ந்த 355 பேரும் மூன்றாவது அமர்வில் பிரயோக விஞ்ஞான பீடம், பொறியியல் பீடம் மற்றும் தொழில்நுட்ப பீடம் ஆகியவற்றைச் சேர்ந்த 430 பேரும் - பட்டம் பெற உள்ளனர் என, உபவேந்தர் கூறினார்.

இரண்டாம் நாளில் இடம்பெறவுள்ள நான்காவது அமர்வில் முகாமைத்துவ வர்த்தக பீடத்தை சேர்ந்த 314 பேரும், ஐந்தாவது அமர்வில் கலை கலாசார பீடத்தை சேர்ந்த வெளிவாரி மாணவர்கள் 350 பேரும் ஆறாவது அமர்வில் முகாமைத்துவ பீடங்களைச் சேர்ந்த வெளிவாரி மாணவர்கள் 361பேரும் பட்டங்கள் பெறவுள்ளனர்.

இதனடிப்படையில் மொத்தமாக 1441 உள்வாரி மாணவர்களும், 711 வெளிவாரி மாணவர்களுமாக மொத்தம் 2152 பேருக்கு - இந்த விழாவில் பட்டங்கள் வழங்கப்பட உள்ளன.

இந்தப் பட்டமளிப்பு விழா - தென்கிழக்கு பல்கலைக்கழக உபவேந்தர் பேராசிரியர் றமீஸ் அபூபக்கரின் நெறிப்படுத்தலில், பல்கலைக்கழக வேந்தர் ஜனாதிபதி சட்டத்தரணி பாயிஸ் முஸ்தபா தலைமையில் நடைபெறவுள்ளது.

பட்டமளிப்பு விழாவின் பிரதம அதிதி பேட்ரிக் மெண்டிஸ் மற்றும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் பிரதித்தலைவரும் சிரேஷ்ட பேராசியருமான சந்தன உடவத்த ஆகியோர் கலந்து கொண்டு பிரதான உரைகளை ஆற்றவிருக்கின்றனர்.

தொழிநுட்ப பீடத்தினால் பரிந்துரைக்கப்பட்ட மொறட்டுவ பல்கலைக்கழக பேராசிரியர் பியசிறி மேற்படி பட்டமளிப்பு விழாவின் போது, கௌரவ கலாநிதி பட்டம் வழங்கி கௌரவிக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை முதல்தடவையாக பல்கலைக்கழகத்தின் இணையத்தளத்தினூடாக இந்தப் பட்டமளிப்பு விழா - நேரடியாக ஒளிபரப்பு செய்யப்படவுள்ளதாகவும் உபவேந்தர் ரமீஸ் தெரிவித்தார். இதற்கென விசேடமாக வடிவமைக்கப்பட்ட இணையத்தள பக்கமும் ஊடக சந்திப்பின் போது - போது அறிமுகம் செய்து வைக்கப்பட்டது.

ஊடக சந்திப்பில் உபவேந்தர் பேராசிரியர் ரமீஸ் அபூபக்கருடன் இணைந்து பட்டமளிப்பு விழாக் குழுத் தலைவர் பேராசிரியர் எம்.பி.எம். இஸ்மாயில், பதில் பதிவாளர் எம்.ஐ.எம். நௌபர், ஊடக பிரிவு இணைப்பாளர் சிரேஷ்ட விரிவுரையாளர் எப்.எச்.ஏ. ஷிப்லி உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். (05)

# இந்திய அரசியல்வாதிகளுக்கு மதியுரை சேவைகளை வழங்கும் நிறுவனத்துடன் அநுர குழுவினர் சந்திப்பு




இந்திய அரசாங்கத்தின் அழைப்பின்பேரில் அந்நாட்டுக்கு விஜயம் மேற்கொண்டுள்ள தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுர குமார திசாநாயக்க உள்ளிட்ட குழுவினர் விஜயத்தின் இரண்டாவது நாளாகிய செவ்வாய்க்கிழமை புது டில்லியில் அமைந்துள்ள ஒவ் சேவ்ட் றிசேர்வ் பவுண்டேசன் உலகளாவிய சிந்தனைக் குழு மன்றத்திற்குச் சென்றார்கள்.

ஒவ் சேவ்ட் றிசேர்வ் பவுண்டேசன் என்பது இந்திய அரசாங்கத்தின் கொள்கை வகுப்பதிலும் தீர்மானம் மேற்கொள்வதிலும் இந்திய அரசியல்வாதிகளுக்கும் வர்த்தக சமூகத்திற்கும் மதியுரை சேவைகளை வழங்குகின்ற நிறுவனமாகும்.

அதன் பின்னர் தூதுக்குழுவினர் இந்தியாவின் எலெக்ரோனிக் மற்றும் தகவல் தொழில்நுட்ப அமைச்சுடன் இணைந்த இந்தியத் தனித்துவ அடையாள ஆணைய அமைப்பைப் பார்வையிட்டதோடு அதன் பிரதானிகளுடன் சுமுகமான கலந்துரையாடலிலும் ஈடுபட்டனர்.

பின்னர் செவ்வாய்க்கிழமை பிற்பகல் தேசிய மக்கள் சக்தியின் தலைவர்கள் அஹமதாபாத் நகரத்தை நோக்கிப் புறப்பட்டனர். (05)

# சுதந்திர வர்த்தக ஒப்பந்தங்களை ஏற்படுத்தி மீண்டும் பொருளாதார வீழ்ச்சி வராமல் தடுப்பதற்கு நடவடிக்கை

## அமைச்சர் அலி சப்ரி கூறுகிறார்



நாடுகளுக்கிடையில் சுதந்திர வர்த்தக உடன்படிக்கைகளை ஏற்படுத்தி நாட்டின் பொருளாதாரத்தை மீண்டும் வீழ்ச்சியடையாத நிலைக்குக் கொண்டு செல்வதற்கு ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் வேலைத்திட்டம் வலுப்படுத்தப்பட்டு முன்னெடுக்கப்பட வேண்டும் என வெளிநாட்டலுவல்கள் அமைச்சர் அலி சப்ரி தெரிவித்தார்.

இந்த வருட இறுதிக்குள் இந்தியா, இந்தோனேசியா, மலேசியா, வியட்நாம் மற்றும் சீனா ஆகிய நாடுகளுடன் சுதந்திர வர்த்தக உடன்படிக்கைகளை கைச்சாத்திட திட்டமிடப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அமைச்சர் அலி சப்ரி இவ்வாறு தெரிவித்தார்.

இங்கு மேலும் கருத்துத் தெரிவித்த அமைச்சர் அலி சப்ரி -

ஸ்திரமான பொருளாதாரத்தை உருவாக்கும் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் தொலைநோக்குப் பார்வையின்படி, போட்டித்தன்மை வாய்ந்த புதிய சந்தைகளுடன் ஒப்பந்தங்களை மேற்கொண்டு இலங்கையின் பொருளாதாரத்திற்கு நேரடியாகப் பங்களிப்புகளைப் பெற்றுக்கொள்ள எதிர்பார்க்கின்றோம்.

அதன் வரலாற்று சிறப்புமிக்க முன்னெடுப்பாக, அண்மையில் தாய்லாந்துடன் சுதந்திர வர்த்தக ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது. இலங்கை தற்போது இருபத்தி இரண்டு கோடி நபர்களுள்ள சந்தைக்குத் தேவையான நடவடிக்கைகளை எடுத்துள்ளதைக் கண்டுகொள்ளலாம்.

ஆனால் உலகில் பாரிய அளவில் சந்தை வாய்ப்புகள் உள்ளன. அபிவிருத்தி அடைந்த பொருளாதாரங்களைக் கொண்ட நாடுகள் அந்தப் பாரிய சந்தை வாய்ப்புகளை சிறப்பாகக் கையாள்வதன் மூலம் தங்கள் பொருளாதாரத்தை வலுப்படுத்தியுள்ளன. வியட்நாம் மற்றும் பங்களாதேஷ் போன்ற நாடுகள் இன்று உலகின் பாரிய சந்தைகளுடன் சுதந்திர பொருளாதார ஒப்பந்தங்களை ஏற்படுத்துவதன் மூலம் வலுவான பொருளாதாரத்தை அடைந்துள்ளன. இதன் மூலம் ஏற்றுமதி பொருளாதாரத்தை வலுப்படுத்த முடியும்.

1991 ஆம் ஆண்டில் இலங்கையின் ஏற்றுமதி வருமானம் சுமார் மூன்று பில லியன் அமெரிக்க டொலர்களாக இருந்தது. அதே காலகட்டத்தில் பங்களாதேஷ் மற்றும் வியட்நாமும் இதே பெறுமதியில் இருந்தன. ஆனால் 2022 இல் வியட்நாமின் ஏற்றுமதி வருமானம் 373 பில்லியன் அமெரிக்க டொலர்களாக மாறியுள்ளது. இவை அனைத்துக்கும் அவர்கள் ஏற்றுமதிப் பொருளாதாரத்தை வலுப்படுத்தியமை தான் பிரதான காரணமாகும்.

ஆசிய நாடுகளுடன் சுதந்திர வர்த்தக உடன்படிக்கைகளை ஏற்படுத்திக் கொண்டு இலங்கையின் ஏற்றுமதிப் பொருளாதாரத்தை வலுப்படுத்தும் நீண்ட கால வேலைத்திட்டத்தில் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க ஈடுபட்டுள்ளார். அது வெற்றியடையும் பட்சத்தில் இலங்கைக்கு வீழ்ச்சியடையாத பொருளாதாரத்தை உருவாக்க முடியும்.

அண்மையில் தாய்லாந்துப் பிரதமருடன் இந்நாட்டுக்கு வருகை தந்திருந்த தூதுக்குழுவினர் இலங்கையுடனான சுதந்திர வர்த்தக உடன்படிக்கையில் மாத்திரமன்றி பல முதலீட்டு வாய்ப்புகள் தொடர்பிலும் கைச்சாத்திடப்பட்டது. இதன் மூலம் ஒருபுறம் ஏற்றுமதி வலுவடையும் அதே வேளையில் இலங்கையில் முதலீட்டு வாய்ப்புகளும் அதிகரிக்கும்.

சுதந்திர வர்த்தக உடன்படிக்கையின் காரணமாக, மீன்பிடி, சுற்றுலா, விவசாயம் மற்றும் புதுப்பிக்கத்தக்க வலுசக்தி ஆகியவற்றில் இலங்கை பெருமளவிலான முதலீடுகளைப் பெறும் வாய்ப்பும் ஏற்பட்டுள்ளது.

தொழில்நுட்ப சேவைகளை வழங்கவும் தாய்லாந்து ஒப்புக் கொண்டுள்ளது. இந்த ஆண்டு இறுதிக்குள் இந்தியா, சீனா, தாய்லாந்து, சிங்கப்பூர், இந்தோனேஷியா, மலேசியா மற்றும் வியட்நாம் ஆகிய நாடுகளுடன் சுதந்திர வர்த்தக உடன்படிக்கைகளை ஏற்படுத்தவும் எதிர்பார்க்கப்படுகின்றது. அதன்மூலம், இலங்கையின் பொருளாதாரத்தை ஸ்திரப்படுத்தி, வளமான இலங்கையை உருவாக்குவதற்கான முதல் அடியை எடுக்கவும் சந்தர்ப்பம் ஏற்பட்டுள்ளது.

உலக நாடுகளின் பாரிய சந்தைகளுடன் பரிவர்த்தனைகளை மேற்கொண்டு இலங்கையின் பொருளாதாரத்தை விரிவுபடுத்தும் வாய்ப்பும் உள்ளது என்றும் அவர் தெரிவித்தார்.

வெளிவிவகார அமைச்சின் செயலாளர் அருணி விஜேவர்தன, அமைச்சின் அதிகாரிகள் ஆகியோரும் இந்த ஊடக சந்திப்பில் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது. (05)

காலைக்கதிர்
Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## புதிதாக ஒன்றுமில்லை

அரசுத் தலைவர் ரணில் விக்கிரமசிங்க நேற்று மீண்டும் ஒரு தடவை நாடாளுமன்றத்தில் கொள்கை விளக்க உரையாற்றினார். சம்பிரதாயங்களுக்கு அமைவாக ஒத்தி வைக்கப்பட்ட நாடாளுமன்றத்தை மீளத் தொடங்கும்போது அரசுத்தலைவர் உரையாற்றும் வழக்கத்திற்கு அமைவாக அவரத உரை இடம்பெற்றது.

நீண்ட நெடிய உரையாக அது அமைந்திருந்தபோதும் அதில் புதிதாக எதுவும் இல்லை. தற்போதைக்கு பொருளாதார நெருக்கடி ஒன்று மட்டுமே பிரச்சினை என்கிற ரீதியில் அது தவிர்த்து வேறு எது பற்றியும் அவர் தனது உரையில் வாயே திற்க்கவில்லை.

தான் பதவியேற்றது முதல் நேற்று வரை இடம்பெற்றவைகளை பெரும் சாதனை என்கிற ரீதியில் பட்டியலிட்டிருந்தார் ரணில். குறிப்பாக இவ்வளவு குறுகிய காலத்திற்குள் இலங்கை பொருளாதார மீட்சியை நோக்கிப் பயணப்படத் தொடங்கியிருப்பதே கிடைத்தற்கரிய பேறு என்கிற வகையில் அவரது கருத்துக்கள் இருந்தன.

பொருளாதாரத்தின் விருத்திக்கு சுற்றுலாத்துறையை மேம்படுத்துவது, விவசாயத்தை நவீனமயப்படுத்துவது, அரச நிறுவனங்களைத் தனியார் மயமாக்குவது, அரசுக்குச் சொந்தமான காணிகளைத் தனியாருக்குத்தாரைவார்ப்பது, புதுப்பிக்கத்தக்க மின் சக்தித் திட்டங்கள், போன்றவையே அரசுத் தலைவரின் உரையில் குறிப்பிடப்பட்ட முக்கிய பொருளாதார அபிவிருத்தித் திட்டங்களாகும். இதில் சுற்றுலாத்துறை தவிர்ந்த மற்றைய துறைகளில் எல்லாம் அரசுத் தலைவர் குறிப்பிடுவதைப் போன்ற குறிப்பிடத்தகுந்த மாற்றங்கள் எவற்றையும் அவதானிக்க முடியவில்லை.

இவற்றில் எதுவும் புதியதில்லை. ஏற்கனவே பலதடவைகள் அவர் மக்களுக்கு வெளிப்படுத்திய விடயங்கள்தான். இந்தத் திட்டங்கள் மூலம் உடனடியாகப் பொருளாதார மீட்சியோ அபிவிருத்தியோ சாத்தியமானதில்லை என்பதையும் அரசுத்தலைவர் தனது உரையில் கோடிகாட்–டுகின்றார். இவற்றின் மூலம் 2048 வரை தொடர்ந்து செல்வதன் மூலமே இலங்கையை அபிவிருத்தி அடைந்த நாடாக மாற்றம் முடியும் என்கிறார். இதை அவர் பதவியேற்ற நாள் முதல் சொல்லிவருகின்றார்.

அதனை நம்பிக் காத்திருப்பதற்கு மக்கள் தயாராக இருக்கின்றார்கள் போன்று தெரியவில்லை. ரணில் என்னதான் மிக விரைவில் பொருளாதார மீட்சியை நாடு எட்டிவிட்டதாகக் கூறினாலும், அதன் பயனை மக்கள் அனுபவிக்க –முடியாத நிலை தொடரும் வரையில் அதன் மீது மக்கள் நம்பிக்கைகொள்வது சாத்தியமற்றதே.

## ஐக்கிய மக்கள் சக்தியின் போராட்டத்தை ரணில் ஏன் தாக்கினார்?

உபுல் யோசப் பெர்னான்டோ



பிரேமதாச ஜே.வி.பியை அடக்கியதால் கையை மடக்கி உயர்த்தி அவருக்கு எதிர்ப்புக் காட்ட எவரும் இருக்கவில்லை. . அனைவரும் பயந்து திகைத்திருந்தனர். பிரேமதாசாவை பதவி நீக்கம் செய்வதற்காக அப்போதைய எதிர்க்கட்சித் தலைவி சிறிமாவோ பண்டாரநாயக்க, பிரேமதாஸ வின் கட்சியைச் சேர்ந்தவர்களான காமினி திஸ நாயக்க மற்றும் அத்துலத் முதலி ஆகியோரின் ஆதரவுடன் கொண்டுவந்த தீர்மானம் போதிய நாடாளுமன்ற உறுப்பினர்களின் கையெழுத்தில்லாத காரணத்தால் சபாநாயகரால் கைவிடப்பட்டதைத் தொடர்ந்து, பிரேமதாஸவுக்கு எதிர்ப்புக் காட்டவோ தெருக்களில் இறங்கவோ முடியாது எதிர்க் கட்சிகள்



பயந்திருந்தன. அப்போது எதிர்க்கட்சியில் இருந்தவரான மகிந்த ராஜப–க்ஷ, எதிரணியின் அச்சத்தை–தப் போக்கவும், மக்களை வீதிக்கு இறக்கவும் தெற்க–லிலிருந்து கொழும்புக்கு நடை–டபயணம் மேற்கொள்ளத் தொடங்கினார். பிரேமதாஸ அந்தப் பேரணிகளைத் தடை செய்வார் அல்லது அடிப்பார் என அனைவரும் எதிர்பார்த்தனர். பேரணியில் சென்றவர்கள் பிரேமதாஸ வுக்கு எதிராக முழக்கங்களை எழுப்பிய போதிலும், அவர் பேரணியைத் தொடக்கூட இல்லை தீங்கு செய்ய வில்லை.

> ஐக்கிய தேசியக் கட்சி சார்பில் சஜித் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்டபோது ரணில் மஹிந்தவுடன் ஒப்பந்–தம் செய்ததை உணர்ந்து பின்னர்தான் இந்தக் கட்சி ஆதரவாளர்கள் ரணிலைக் கைவிட்டனர். ஐக்கிய மக்கள் சக்தியின் மீது கண்ணீர் புகை குண்டுகளை வீசுவதற்கு சற்று முன்னதாக லொஹான் ரத்வத்–தவை இராஜாங்க அமைச்சாக நியமித்தார் ரணில். இதே லொஹான் ரத்வத்த 2001ஆம் ஆண்டு ஐக்கிய தேசியக் கட்சி ஆதரவாளர்கள் 10 பேரை கண்டி, உடதலவி–ன்ன என்ற இடத்தில் படுெ–காலை செய்தவர் என்கிற குற்றச்சாட்டு உண்டு. அவர்கள் அனைவரும் அதேயாண்டு நடந்த தேர்தலில் ரணிலைப் பிரதமராக்குவதற்காகப் பா–டுபட்ட கட்சித் தொண்டர்கள்.

### பிரேமதாஸ தொட்டதில்லை

அதன் பின்னர், சந்திரி–கா ஒரு பேரணியை நடத்–தினார். கொரகொல்லவில் உள்ள பண்டாரநாயக்க சமாதி முன்பாகத் தொடங்கிய அந்தப் பேரணியை கல்லுமுவதொரவில் உள்ள பண்டாரநாயக்க சிலை வரையில் அவர் ஏற்பாடு செய்திருந்தார். பிரேம–தாஸ அந்தப் பேரணியையும் தொடவில்லை.

"என் மேல் சீற்றங்கொண்டவர்களின் ஊர்வலம் செல்கிறது" அப்படித்தான் அந்தப் பேரணிகளை பிரேமதாஸ விமர்சித்தார். பிரேமதாஸவுக்கு எதிர–ாக மனிதச் சங்கிலிப் போராட்டம், சங்கு ஊதும் போராட்டம் என்று எல்லாம் எதிர்க்கட்சிகள் நடத்திய போதும் பிரேமதாச அவர்களைத் தொட்டதில்லை.

பிரேமதாச கொல்லப்பட்டு விஜேதுங்க ஜனா–திபதியானார். அவரது ஐ,தே.க. ஆட்சிக்கு எதிராக சந்திரிகா சூரியகந்தவின் பெரும் புதைகுழி–களைத் தோண்டச் சென்றார். அவர்களை அடக்குவதற்க–ாக விஜேதுங்க அவர்கள் பின்னால் செல்லவில்லை.

### சந்திரிக்கா அடித்தார்

சந்திரிகா 1994இல் ஆட்சிக்கு வந்ததும் ஐ.தே.க. ஒரு கொடியை உயர்த்–தினால்கூடஅவர்களை விரட்டிச் சென்று தா–க்கினர். ஆனால், 1999ஆம் ஆண்டு, வடமேற்கு மாகாண சபைத் தேர்தல் மோசடிக்கு எதிராக ஐக்கிய தேசியக் கட்சி கொழும்பில் சத்தியாக்கிரகப் போராட்டம் நடத்தியபோது சந்திரிகா அவர்களைத் தாக்கவில்லை. 2000 ஆம் ஆண்டு ஐ.தே.க. மக்களை அணிதிரட்டி மருதானையில் பெரும் போராட்டத்தை நடத்தியது. அதனையடுத்து கண்டியில் இருந்து கொழும்பு நோக்கி ஒரு பேரணி தொடங்கியது. அப்போதும் சந்திரிகா அவர்களைத் தாக்கவில்லை.

2001இல் சந்திரிக்காவின் அணுகுமுறை அப்படியிருக்கவில்லை. அவர் நாடா–ளுமன்றத்தை ஒத்திவைத்து சர்வஜன வாக்கெடுப்புக்குச் செல்ல முயன்றபோது, அதற்கு எதிராக ஐ.தே.க. கொழும்பைச் சுற்றி ஆட்களைத் திரட்டியது, சந்திரிகா வெகுண்டெழுந்தார். அப்போதைய எதிர்க்–கட்சித் தலைவர் ரணில் மீது கண்ணீர் புகைக் குண்டுகளை வீசினார். ஐ.தே.கவின் போராட்டம் கலைக்கப்பட்டது. இரண்டு கொலைகள் நடந்தன. சுஜீவா சுடப்பட்டார்.

2001ஆம் ஆண்டு ரணில் பிர–தமரானபோது ரணிலின் போர் நிறுத்த உடன்படிக்கைக்கு எதிராக ஜே.வி.பி. தெற்கில் இருந்து கொழும்புக்கு பேரண–ியாக வந்தது. சிறீ லங்கா சுதந்திரக் கட்சி தலைமையிலான எதிர்கட்சிகள் போதுமான அளவு பொறுத்துக்கொண்டதாக கூறி கொழும்பில் ஆர்ப்பாட்டம் ஒன்று நடத்தப்பட்டது. ஆனால், ரணில் அந்தப் போராட்டங்களில் கைவைக்கவில்லை.

2004 இல் ஐக்கிய தேசியக் கட்சியினால் சந்திரிகா மீண்டும் ஆட்சியைப் பிடித்த பின்னர் எஸ்.பி.திஸநாயக்க சிறையில் அடைக்கப்பட்டார். அவரை விடுவிக்க வலியுறுத்தி ஹகுரன்கெத்தவில் இருந்து கொழும்பு நோக்கிப் பேரணி ஒன்று வந்தது. 2005 ஜனாதிபதித் தேர்தலை நடத்துவதற்காக தெற்கில் இருந்து கொழும்பு வரை பேரணி ஒன்று ஆரம்பிக்கப்பட்டது. சந்திரிகா அவை எவற்றையும் அடித்து அடக்கவில்லை. (5ஆம் பக்கம் பார்க்க..)



# ஐக்கிய மக்கள் சக்தியின் போராட்டத்தை........

(4ஆம் பக்கத் டிதாடர்ச்சி...)

**மைத்திரி , கோட்பா கைவைத்ததில்லை**

2010இல் சிறையில் அடைக்கப்பட்ட சரத் பொன்சேகாவை விடுவிக்க எதிர்க்கட்சிகள் ஏற்பாடு செய்திருந்த கார் ஊர்வலத்தின் மீது அப்போதைய ஜனாதிபதியான மகிந்த ராஜபக்சவுக்கு ஆதரவான குண்டர்கள் தாக்குதல் நடத்தினர். ஆனால், 2013இல் ரணில் கொழும்பு மருதானையில் நடத்திய ஆர்ப்பாட்டம் மீது மகிந்த கைவைக்கவில்லை.

2015இல் மைத்திரி ஜனாதிபதியாகவும், ரணில் பிரதமராகவும் இருந்தபோது, கொழும்புக்கு நடைபயணம் மேற்கொண்ட மஹிந்தவின் கூட்டு எதிரணியினர் மீது தாக்குதல் நடத்தப்படவில்லை. மைத்திரியோ, ரணிலோ அவர்களைத் தொட நினைக்கக்கூடவில்லை.

2019 ஆம் ஆண்டு ஜனாதிபதி கோத்தாபாவிற்கு எதிரான முதலாவது எதிர்ப்பு அணிவகுப்பை ஐக்கிய மக்கள் சக்தி ஏற்பாடு செய்தது. முதல் தடவையாக ஜனாதிபதி செயலகத்திற்கு கைக்கெட்டும் தூரம் வரையில் பெருமளவான மக்கள் கூடியிருந்த நிலையில், இரண்டாவது தடவையாக ஜனாதிபதி செயலகத்திற்குச் சென்று ஜனாதிபதி அலுவலகத்தை சுற்றி ஊர்வலமாகச் சென்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். அந்த எதிர்ப்புடன் ‘அரகலய’ போராட்டத்தின் அடித்தளம் அமைக்கப்பட்டது. பின்னர் கண்டியில் இருந்து கொழும்புவரை பேரணியாகச் சென்று பெரும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். ஆனால் கோட்டாபய அவர்களைத் தாக்க ஒரு கல்லைக்கூட எறியவில்லை.

ரணில் ஜூலை 2022 இல் ஜனாதிபதியானார். ரணில் ஒரு வருடத்திற்கும் மேலாக சுதந்திரமாக ஆட்சி செய்ய அனுமதிக்கப்பட்டார், எதிர்க்கட்சிகள் அமைதி காத்தன. அண்மையில்தான் ஐக்கிய மக்கள் சக்தி கொழும்பில் ரணிலுக்கு எதிராக முதல் போராட்டத்தைத் தொடங்கியது. அந்த முதல்ப் போராட்டத்திலேயே எதிர்கட்சித் தலைவர் சஜித்தை குறிவைத்து ரணில் தாக்கினார். 2001இல் ரணிலைக் குறிவைத்து அப்போதைய ஜனாதிபதி சந்திரிக்கா தாக்கியதைப் போலவே இப்போது ரணிலும் தாக்கினார்.

ரணில் ஒரு தாராளவாத ஜனநாயகவாதியாக இலங்கையிலும் உலகிலும் அறியப்படுகிறார். அவர் ‘லீக் ஆஃப் டெமாக்ராட்ஸ்’ என்ற ஜனநாயக அமைப்பின் தெற்காசியத் தலைவராகவேறு உள்ளார். அப்படியிருந்தும் அவர் ஜனநாயகப் போராட்டங்களை அடித்து நொருக்கி அடக்குகின்றார்.

ஒரு காலத்தில் ரணிலை ஜனாதிபதியாகவும் பிரதமராகவும் ஆக்குவதற்காகப் பரப்புரை செய்தவர்கள், போராட்டம் நடத்தியவர்கள், சுவரொட்டிகள் ஒட்டியவர்கள், வீடுகளை இழந்து, வேலை இழந்து அவருக்காகப் பாடுபட்டவர்கள்தான் இப்போது ஐக்கிய மக்கள் சக்தியில் உள்ளார்கள் என்கிறபோதும் ரணில் ஏன் அவர்களைத் தாக்கினார்?

2015ஆம் ஆண்டு ஜனாதிபதியாக இருந்த மைத்திரிபால சிறிசேனவுக்கு எதிராக மகிந்த ராஜபக்ச சிறீ லங்கா சுதந்திரக் கட்சித் தொண்டர்களைக் கொண்டு கொழும்பில் ஆர்ப்பாட்டம் செய்வித்தார். ஆனால் அவர்களைத் தாக்க மைத்திரி தனது கைகளை உயர்த்தவில்லை. ஏனெனில் அவருக்குத் தெரியும் அழைத்து வரப்பட்டிருப்பவர்கள் சிறீ லங்கா சுதந்திரக் கட்சியைச் சேர்ந்த அப்பாவித் தொண்டர்கள் என்று, ஒரு காலத்தில் தனக்காகவும் கட்சியில் வேலை செய்தவர்கள் என்று.

**ரணிலுக்கு உண்மை புரிந்தது**

ஆனால், கொழும்பில் போராட்டம் நடத்திய ஐக்கிய மக்கள் சக்தியினரைப் பார்த்து ரணில் ஏன் அப்படி உணரவில்லை...?

2001இல் ரணில் பிரதமராக இருந்தபோது அவரைத் துரோகி என்று தூற்றிக்கொண்டு கொழும்புக்கு வந்து போராடிய சிறீ லங்கா சுதந்திரக் கட்சியினர் மீது கைவைக்கக்கூடத் துணியாத ரணில், 2015 முதல் 2019 வரை தன்னைப் பதவியில் இருத்துவதற்காகப் போராடிய தனது முன்னாள் சகபாடிகளையே இன்று தாக்கியிருப்பது பெரும் சோகம்.

ரணில் மீது சந்திரிகாவின் ஆட்சியில் கண்ணீர் புகைக் குண்டுகள் வீசப்பட்டபோது எதற்கும் அஞ்சாமல் ரணிலுக்காக கொம்புக்கு வந்த அப்பாவி ஐக்கிய தேசியக் கட்சி ஆதரவாளர்கள் இவர்கள். 2004இல் சந்திரிகா ரணிலின் ஆளும் தரப்பிலிருந்து 4 அமைச்சுக்களைப் பறித்து, ரணிலை அச்சுறுத்தியபோது தனது பிரதமர் பதவியைக் காப்பாற்ற கொழும்புக்கு வருமாறு அவர் விடுத்த ஓர் அழைப்புக்காக ஓடோடி வந்த அப்பாவி ஐ.தே.க. தொண்டர்கள் இவர்கள்.அந்த நேரம் சந்திரிகாவின் வீட்டைச் சூறையாடுங்கள் என்று ரணில் கேட்டிருந்தால் அதற்கும் தயாராக இருந்த தொண்டர்கள் இவர்கள்.

2018இல் அன்றைய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன பிரதமரான ரணிலை பதவியில் இருந்து நீக்கியபோது, ரணிலுக்காக கொழும்புக்கு ஓடி வந்தவர்களும் இதே அப்பாவி ஐக்கிய தேசியக் கட்சி ஆதரவாளர்களே. ஒன்றன் பின் ஒன்றாக அடுத்தடுத்து ரணில் தோல்வியடைந்தபோதும் அவர்கள் ரணிலைக் கைவிட்டதில்லை.

ஐக்கிய தேசியக் கட்சி சார்பில் சஜித் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்டபோது ரணில் மஹிந்தவுடன் ஒப்பந்தம் செய்ததை உணர்ந்து பின்னர்தான் இந்தக் கட்சி ஆதரவாளர்கள் ரணிலைக் கைவிட்டனர். ஐக்கிய மக்கள் சக்தியின் மீது கண்ணீர் புகை குண்டுகளை வீசுவதற்கு சற்று முன்னதாக லொஹான் ரத்வத்தவை இராஜாங்க அமைச்சாக நியமித்தார் ரணில். இதே லொஹான் ரத்வத்த 2001ஆம் ஆண்டு ஐக்கிய தேசியக் கட்சி ஆதரவாளர்கள் 10 பேரை கண்டி, உடதலவின்ன என்ற இடத்தில் படுகொலை செய்தவர் என்கிற குற்றச்சாட்டு உண்டு. அவர்கள் அனைவரும் அதேயாண்டு நடந்த தேர்தலில் ரணிலைப் பிரதமராக்குவதற்காகப் பாடுபட்ட கட்சித் தொண்டர்கள்.

அதேபோன்று ஐக்கிய மக்கள் சக்தி போராட்டக்காரர்கள் மீது கண்ணீர் புகை குண்டுகளை வீசிக் கொண்டிருந்தபோதே சசீந்திர ராஜபக்சவுக்கு இன்னொரு இராஜாங்க அமைச்சர் பதவியை வழங்கியிருந்தார் ரணில்.

“இனிமேல் ஐக்கிய தேசியக் கட்சியினர் எனக்கு வாக்களிக்கப் போவதில்லை. வரும் ஜனாதிபதித் தேர்தலில் நான் வெற்றிபெறவேண்டுமானால் மொட்டுக் கட்சியினரை மகிழ்வித்தால்தான் அது முடியும்” என்பதுதான் அந்த நேரத்தில் ரணிலின் சிந்தனையாக இருந்திருக்கவேண்டும்.


குறிஞ்சி மலை நகர் Kurinchi Hill City

கொழும்பு - மட்டக்களப்பு A4 வீதியில் 190 ஆவது km இல் 800 m தூரத்தில்

பதுளை மாவட்டம் ஹல்துமுல்லை பிரதேச செயலர் பிரிவு

15 பேர்ச் முதல் 40 பேர்ச் வரையான காணித்துண்டுகள் விற்பனைக்கு!

சுற்றுலா விடுதி, விடுமுறை வீடு ஆகியவற்றுடன் தேயிலை, கோப்பி, கறுவா பயிர்ச்செய்கையும்



அருகில் உள்ள சுற்றுலா மையங்கள்

(100கிமீ சுற்றுவட்டாரத்தில்)

பம்பரகந்த, தியலும, துன்கிந்த, இராவணா, ரம்போடை உட்பட 10இற்கும் மேற்பட்ட நீர்வீழ்ச்சிகள்

தேசிய சரணாலயங்கள் மற்றும் பூங்காக்கள்

Horton Plains National Park, Hakgala Botanical Gardens
Victoria Park, Kande Ela Educational Forest Park
Lunugamvehera National Park, Yala National Park
Udawalawe National Park

கதிர்காமம் முருகன் கோவில், சீதா அம்மன் ஆலயம், ரம்போடை ஆஞ்சனேயர் கோவில்



தொடர்புகளுக்கு: 0777 43 5557

தனியான வாகன தரிப்பிட வசதி

முழுமையான 24 மணிநேர பாதுகாப்பு சேவை

தொடர்ச்சியான பராமரிப்பு ஏற்பாடு

மின்சார இணைப்பு ஏற்பாடு - குடிதண்ணீர் வசதி

உணவகம் - உள்ளக விளையாட்டுத்திடல்

தேயிலை, கோப்பி, கறுவா தொழிற்சாலைகள்

சுற்றுலா ஏற்பாடுகள்

பேர்ச் 250,000/-

பரப்பு 25இலட்சம்

5th Project

இது ஒரு கற்பகவனம் செயற்திட்டம்

Good Gift Property Developers (Pvt) Ltd




கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 071 7354308
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road,
Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இந்த விசேட விலைக்கழிவாக
30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து
வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
Vegitable Fried Rice with
Panner & Ghee - 900/=
Chikne Fried Rice with
Vegetable - 1150/=
Kothu Rotty With Vegitable
in Indian Style
DESSERT
Ice Cream Cup - 60/=
Fruit Salad - 60/=
Ice Cream & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
JUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Cococola M - 70/=
Pepsi M - 70/=
Swebpees Tin - 250/=
Coca Cola Tin - 250/=

காலைக்கதிர் Kalaikkathir

# இலங்கை இராணுவ வைத்திய படையின் 10 ஆவது குழு தென் சூடானுக்கு பயணம்










இலங்கை இராணுவ வைத்திய படையணியின் 10 ஆவது குழு தென் சூடானிலுள்ள ஐக்கிய நாட்டின் தரம் - 2 வைத்தியசாலையில் கடமைகளைப் பொறுப்பேற்க செவ்வாய்க்கிழமை அதிகாலை இலங்கையில் இருந்து புறப்பட்டது.

தென் சூடானுக்குச் செல்லும் 10 ஆவது குழுவில் கட்டளை அதிகாரி லெப்டினன் கேணல் டி.எம்.டி.ஜே. திசாநாயக்க ஆர்.எஸ்.பீ. யூ.எஸ்.பீ. மற்றும் 2 ஆம் கட்டளை அதிகாரி மேஜர் என்.ஐ. ரத்நாயக்க தலைமையில் 14 இராணுவ அதிகாரிகள், ஒரு கடற்படை அதிகாரி மற்றும் 49 சிப்பாய்கள் உள்ளடங்கலாக 64 இராணுவ வீரர்கள் உள்ளடங்குவர்.

இராணுவத் தளபதியைப் பிரதிநிதித்துவப்படுத்தி இலங்கை இராணுவ சுகாதார சேவைகள் பணிப்பகத்தின் பணிப்பாளர் நாயகமும் இலங்கை இராணுவ மருத்துவ படையணியின் படைத் தளபதியுமான மேஜர் ஜெனரல் பீஏசி பெர்னாண்டோ யூ.எஸ்.பீ. மற்றும் வெளிநாட்டு நடவடிக்கைகள் பணிப்பகத்தின் பணிப்பாளர் பிரிகேடியர் ஜீஎல்எஸ்டபிள்யூ லியனகே, யூஎஸ்பீ பீஎஸ்சீ, மருத்துவ சேவை பணிப்பகத்தின் பணிப்பாளர் பிரிகேடியர் கேஜீகேஎச் விஜேவர்தன ஆர்எஸ்பீ யூஎஸ்பீ, இலங்கை இராணுவ மருத்துவ படையணியின் நிலைய தளபதி பிரிகேடியர் டபிள்யூஎயூஎஸ் வனசேகர ஆர்எஸ்பீ யூஎஸ்பீ மற்றும் சிரேஷ்ட அதிகாரிகள் பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் குழுவினரை வழியனுப்புவதில் கலந்துகொண்டனர்.

(05)

## தரம் ஒன்றில் இணைந்த மாணவருக்கு வரவேற்பு





(அஸ்ஹர் இப்றாஹிம்)

2024 ஆம் புதிய கல்வி ஆண்டின் முதலாம் தரத்திற்கு இணைந்து கொண்ட மாணவர்களை வரவேற்று மகிழ்விக்கும் நிகழ்வு நிந்தவூர் அல்- மஸ்ஹர் பெண்கள் உயர்தர பாடசாலையின் அதிபர் எம்.ரி. நௌபல் அலி தலைமையில் இடம்பெற்றது.

இந் நிகழ்வில் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சியின் பிரதி தேசிய அமைப்பாளரும், நிந்தவூர் பிரதேச சபையின் முன்னாள் தவிசாளருமான எம்.ஏ.எம். அஷ்ரப்( தாஹிர்) பிரதம அதிதியாகவும் , அல்- மஸ்ஹர் பெண்கள் உயர்தர பாடசாலை அபிவிருத்தி குழு உறுப்பினரும் நிந்தவூர் பிரதேச சபையின் முன்னாள் உறுப்பினரும் சட்டத்தரணியுமான ஏ.எல். றியாஸ் ஆதம், அல்- மஸ்ஹர் பெண்கள் உயர்தர பாடசாலையின் ஓய்வு நிலை அதிபர் ஏ.எல். நிசாமுதீன் ஆகியோர் கௌரவ அதிதிகளாகவும் மற்றும் பாடசாலையின் ஆசிரியர்கள், பெற்றோர்கள், மாணவர்களென பலரும் கலந்து கொண்டனர். (05)



காலைக்கதிர் Kalaikkathir

## வடக்கிலுள்ள...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அந்த நிறுவனங்களில், தேசிய இரத்தினக்கல் மற்றும் ஆபரண அதிகார சபை மாத்திரமே இலாபம் ஈட்டியது. அந்த நேரத்தில் ஆண்டுக்கு சுமார் 280 மில்லியன் டொலர் வருமானம் ஈட்டிவந்தது.

ஆனால் கடந்த வருட இறுதிக்குள் இரத்தினக்கல் மற்றும் ஆபரண அதிகார சபை மூலம் சுமார் 480 மில்லியன் டொலர்கள் வருமானம் ஈட்ட முடிந்துள்ளது. வாழைச்சேனை காகிதத் தொழிற்சாலையையும் மீண்டும் ஆரம்பித்தோம். அந்த நிறுவனம் இன்னும் இலாபமீட்டும் நிறுவனமாக மாறவில்லை. ஆனாலும் ஏற்கனவே உள்ள கடனை செலுத்தி ஊழியர்களின் சம்பளத்தை வழங்கி அதனைத் தொடர்ந்து செயற்படுத்தும் நிலைக்கு கொண்டு வந்துள்ளோம்.

பொஸ்பேட் நிறுவனம் சுமார் 24 மில்லியன் மதிப்பிலான கனிம வளங்களைக் கொண்டுள்ளது. ஆனால் அரசசார்பற்ற நிறுவனங்கள் தொடுத்துள்ள வழக்குகளின் காரணமாக அதிலிருந்து வருமானம் ஈட்ட முடியாத நிலை உள்ளது. இதுபோன்ற பிரச்சினைகள் இருந்தாலும், குறிப்பிட்ட அளவு பொஸ்பேட்டை விற்பனை செய்ய முடிந்தது. அதன் மூலம் அனைத்துக்

கடன்களையும் செலுத்தி சம்பளமும் கொடுத்து திறைசேரிக்கும் 350 மில்லியன் ரூபாவை வழங்க முடிந்துள்ளது. அத்துடன் இந்த நிறுவனங்கள் ஆனையிறவு மற்றும் மன்னார் உப்பளங்கள் மூலம் இலாபம் ஈட்டி 100 மில்லியன் ரூபாவை திறைசேரிக்கு வழங்கினோம்.

நம் நாட்டில் உள்ள வளங்களை நாம் பயன்படுத்திக் கொள்ளலாம். ஆனால் அதை செயல்படுத்துவதில் பல்வேறு தடைகள் எழுகின்றன. உதாரணமாக, பொஸ்பேட் ஏற்றுமதிக்கு எதிராக வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளது. ஆனால் இந்த பிரச்சினைகளையும் தடைகளையும் நாம் எதிர்கொள்ள வேண்டியுள்ளது. பிரச்சினைகள் எழுகிறது என்பதற்காக நாட்டின் வளங்களைப் பயன்படுத்திக் கொள்வதை நிறுத்தக் கூடாது. நாடு பொருளாதார வீழ்ச்சி அடைந்திருக்கும் வேளையில் அவைகளைப் பயன்படுத்திக் கொள்ளாததை நான் பாரிய குற்றமாகப் பார்க்கிறேன்.

சீமெந்துக் கூட்டுத்தாபனம் தற்போது பெயரளவிலேயே செயற்படுகிறது. சுமார் 5000 ஏக்கர் காணியும் பல மில்லியன் டொலர்கள் மதிப்பிலான கனிம வளங்களும் அங்கு உள்ளன. அதை வருமானம் ஈட்டும் மூலங்களாக மாற்ற திட்டமிட்டுள்ளோம். இதன்படி வருடத்திற்கு சுமார் 300 மில்லியன் டொலர் வருமானம் ஈட்ட எதிர்பார்க்கப்படுகிறது. அதில் முதலீடு செய்யத்தயாராக உள்ள நிறுவனமும் தெரிவு செய்யப்பட்டுள்ளது.

மேலும் எல்ல நகரம் தற்போது சுற்றுலாப் பயணிகளால் நிரம்பி வழிகிறது. எல்ல நகரில் மாத்திரம் தினமும் 3000 சுற்றுலாப் பயணிகள் வருகிறார்கள் என்றால், நாடு முழுவதும் எவ்வளவு சுற்றுலாப் பயணிகள் வருகைதந்திருக்க முடியும் என்பதை மதிப்பிடலாம். இந்த வாய்ப்புகள் அனைத்தும் நாட்டின் வளர்ச்சிக்காகப் பயன்படுத்த வேண்டும் என்றார்.

## மக்கள் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சின்னத்தில் பரந்த கூட்டணியுடன் எதிர்வரும் பொதுத் தேர்தலில் களமிறங்கவுள்ளது. பொது மக்கள் ஐக்கிய முன்னணியின் யாப்பு திருத்தத்தின் பிரகாரம் சிறீ லங்கா சுதந்திரக் கட்சிக்கு தலைமைத்துவ சபையில் 25 வீத பிரதிநிதித்துவமும் செயற்குழுவில் 50 வீத அதிகாரமும் கிடைக்கும்.

பொது மக்கள் ஐக்கிய முன்னணியின் புதிய உறுப்பினர்களை எதிர்வரும் 22 ஆம் திகதி தெரிவு செய்வதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. அதற்கமைய, கட்சியின் பொதுச் செயலாளராக புதிய உறுப்பினரொருவர் தெரிவுசெய்யப்படவுள்ளார் என்றார்.

தொடர்ச்சி 8ம் பக்கம்....



காலைக்கதிர் Kalaikkathir

# தேராவில் குளத்தை அண்டிய மக்களுக்கு தீர்வு வழங்க விஷேட கலந்துரையாடல்

தேராவில் குளத்து நீரை வெளியேற்றி மக்களது வாழ்க்கை நிலையை சுமுகமாக ஏற்படுத்துவதற்கான கலந்துரையாடல் ஒன்று செவ்வாய்க்கிழமை புதுக்குடியிருப்பு பிரதேச செயலகத்தில் பிரதேச செயலாளர் சி.ஜெயக்காந் தலைமையில் இடம்பெற்றிருந்தது.

முல்லைத்தீவு மாவட்டத்தின் புதுக்குடியிருப்பு பிரதேச செயலாளர் பிரிவுக்குப்பட்ட தேராவில் பகுதியில் கடந்த மாதம் பெய்த அடைமழை காரணமாக தேராவில் குளத்தில் மேலதிக நீர் வெளியேறாது தடைப்பட்டுள்ளதால் குளத்தின் அருகில் அமைந்துள்ள சுமார் பதினொரு வீடுகள் வெள்ளத்தால் மிகவும் மோசமாகப் பாதிப்புற்றுடன் குறித்த வீட்டில் வசித்த மக்கள் இடம் பெயர்ந்து இடைத்தங்கல் முகாம்களிலும் உறவினர் வீடுகளிலும் தங்கியுள்ளனர்.

இது தொடர்பாகச் சம்பவ இடத்தை பார்வையிடுவதற்காக கடந்தமாதம் 31ஆம் திகதி கிராமிய பொருளாதார இராஜாங்க அமைச்சரும் முல்லைத்தீவு மாவட்ட அபிவிருத்திக் குழுத் தலைவருமான காதர் மஸ்தான், வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் வினோ நோகராதலிங்கம், முல்லைத்தீவு மாவட்ட செயலாளர் அ.உமாமகேஸ்வரன், புதுக்குடியிருப்பு பிரதேச செயலாளர், வீதி அபிவிருத்தி அதிகார சபையின் நிறைவேற்றுப் பொறியியலாளர், கமநல சேவைகள் திணைக்கள உதவி ஆணையாளர் உட்பட பல அதிகாரிகள் வெள்ளத்தால் பாதிப்புற்ற தேராவில் பகுதிக்கு விஜயம் செய்து அங்கு கிராம மக்களையும் இணைத்து விசேட கலந்துரையாடலை மேற்கொண்டதுடன் இது தொடர்பாக கலந்துரையாடி மக்களுக்கு விரைவாக தீர்வை பெற்றுக் கொடுப்பதாக கிராமிய பொருளாதார இராஜாங்க அமைச்சரும் முல்லைத்தீவு மாவட்ட அபிவிருத்தி குழு தலைவருமான காதர் மஸ்தான் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்திருந்தார்.

இதற்கமையவே செவ்வாய்க்கிழமை புதுக்குடியிருப்பு பிரதேச செயலக மண்டபத்தில் கலந்துரையாடல் இடம்பெற்றிருந்தது.

குறித்த கலந்துரையாடலின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த புதுக்குடியிருப்பு பிரதேச செயலாளர் சி.ஜெயக்காந் - உடையார்கட்டு தெற்கு தேராவில் குளத்தை அண்டிய பகுதியை சேர்ந்த மக்களுடைய வதிவிடங்களிலே வெள்ளம் தேங்கி நிற்கின்ற அபாயம் மாத கணக்காகத் தொடர்கின்றது. அவர்களுடைய வாழ்க்கை நிலையை சுமுகமாக ஏற்படுத்துவதற்கான அதனை ஆராயும் கலந்துரையாடல் நடைபெற்றிருந்தது.

ஏ35 வீதியில் பாலத்தை அமைத்து வெள்ள நீரினை அகற்றுவது என்றும் அதற்காக பாலத்தை அமைப்பதற்கு 5.6 மில்லியன் ரூபா தேவை என கணக்கிடப்பட்டுள்ளது. அதனை வீதி அபிவிருத்தி அதிகார சபையினரின் நிதி ஒதுக்கீட்டில் தங்களுடைய பொறுப்பில் செய்து தருவதாக வாக்குறுதியளித்திருக்கிறார்கள்.

அதன் பணியை எதிர்வரும் திங்கட்கிழமை ஆரம்பிப்பதாக கூறியிருக்கின்றார்கள்.

அதேபோல் வாய்க்கால் வெட்டி அந்த வீதியை கடத்தி நீரினை வெளியேற்ற வேண்டும் அதற்கு 13.4 மில்லியன் ரூபா நிதி தேவை என கமநல உதவி ஆணையாளர் திணைக்களத்தால் தயாரிக்கப்பட்டுள்ளது. அதற்குரிய நிதியினை உடனடியாக தேட முடியாமல் உள்ளது. அவசரமான நிதியை வைத்துக் கொண்டு பிரதேசசபையின் கனரக வாகனங்களை கொண்டு எரிபொருளை வழங்குவது என்ற அடிப்படையில் அந்த வேலையை ஆரம்பிக்க இருக்கின்றோம்.

அந்தவகையில் அப்பகுதியில் இருக்கின்ற தேக்க மரங்களை மரக்கூட்டுத்தாபனத்தின் உதவியுடன் தேவைக்கேற்ப வெட்டி அகற்றுவதற்கும் , அங்குள்ள சிறு புதர்களை வனவளதிணைக்களத்தின் அனுசரணையை பெற்று கிராம மக்களின் சிரமதானத்தின் மூலம் அகற்றுவதற்கும் தீர்மானிக்கப்பட்டிருக்கின்றது எனத் தெரிவித்தார். குறித்த கலந்துரையாடலில் முல்லைத்தீவு மாவட்ட கமநல அபிவிருத்தி உதவி ஆணையாளர் பரணீதரன், முல்லைத்தீவு மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பணிப்பாளர் கோகுலன், வீதி அபிவிருத்தி அதிகார சபையின் பொறியியலாளர், நில அளவை திணைக்களத்தினர், புதுக்குடியிருப்பு பிரதேச செயலக காணி பயன்பாட்டு உத்தியோகத்தர் கமலநாதன், காணி குடியேற்ற அலுவலர், புதுக்குடியிருப்பு பிரதேச சபையின் அபிவிருத்தி உத்தியோகத்தர் முரளீதரன், கிராம சேவையாளர்கள் மூங்கிலாறு கிராம சங்கத்தின் உபதலைவர் உதயன், கிராம மக்கள் என பலரும் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (05)

# கிளிநொச்சி மாவட்டப் பொது வைத்தியசாலையில் எக்கோ நிபுணர் இன்மையால் நோயாளர்கள் அவதி

கிளிநொச்சி மாவட்டப் பொது வைத்தியசாலைக்கு மூன்று மாவட்டங்களில் உள்ள நோயாளர்கள் கிளிநொச்சி வைத்தியசாலைக்கு அதிகளவானோர் பயன்படுத்தக்கூடிய வைத்தியசாலையில் எக்கோ நிபுணர் இடத்தை நிவர்த்தி செய்ய முடியாமல் இருப்பதால் எக்கோ பரிசோதனைக்காக வருகின்ற பெருமரவான நோயாளர்கள் பிரிதொரு தவணை வழங்கி வருகின்றார்கள். இதே போன்று அவசர நிலைமையில் நோயாளர்களை யாழ்ப்பாணம் அல்லது வவுனியா வைத்தியசாலைக்கு எக்கோ பரிசோதனைக்காகக் கொண்டு செல்ல வேண்டிய துப்பாக்கி நிலை காணப்படுகின்றது.

எக்கோ நிபுணர் மன்னார் மாவட்டத்தின் வைத்தியசாலையில் இருந்து கிளிநொச்சி வைத்தியசாலைக்கு இடமாற்றம் பெற்ற எக்கோ நிபுணர் சுகம் தராத காரணத்தால் நோயாளர்கள் கடும் சிரமத்திற்கானப்படுவதால் அதிகாரிகள் கவனத்தில் கொள்ளுமாறு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. (05 - 113)

# ரோட்டரி மாவட்ட ஆளுநர் கல்முனைக்கு வருகை







(வி.ரி. சகாதேவராஜா)

ரொட்டரி மாவட்டம் 3220 இன் மாவட்ட ஆளுநர் ரொட்டேரியன் ஜெரோம் இராஜேந்திரன் கல்முனைக்கு விஜயம் செய்தார்.

ரொட்டரி கழகத்திற்கு உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்டு கழகத்தின் செயற்பாடுகள் தொடர்பாக ஆராய்ந்தார். பின்னர் அவர் தலைமையிலான கூட்டம் கல்முனை வெள்ளை தாமரை மண்டபத்தில் நடைபெற்றது.

கழகத்தலைவர் ஏ எல் ஏ. நாசர் தலைமையில் , செயலாளர் கே . குகதாசன் , பொருளாளர் வீ.விஜயசாந்தன் உட்பட சகல அங்கத்தவர்களும் பங்குபற்றினர்.

ரொட்டரி மாவட்ட செயலாளர் என். நமனா மற்றும் உதவி ஆளுநர் தி .ரகுராம் ஆகியோரும் பங்குபற்றியதுடன், ஆளுநர் கழகத்தின் முன்னேற்றத்திற்கு பாராட்டுக்களையும் தெரிவித்துள்ளார். (05)

# கம்பஹா மாவட்ட திஹாரிய உலமாக்களின் சேவை முஸ்லிம் சமூகத்திற்கு நல்லதோர் முன்னுதாரணம்

## கலாநிதி ஹஸன் மௌலானா கருத்து







(எம்.எஸ்.எம்.ஸாகிர்)

முஸ்லிம்கள் பிளவுபடுவதை தடுக்குமுகமாக முஸ்லிம் சமூகத்தின் எதிர்காலத்தைக் கருத்தில் கொண்டு கம்பஹா மாவட்ட திஹாரியைச் சேர்ந்த அஹ்லுஸ் ஸுன்னத்-வல்-ஜமாஅத் தரீக்கா, தப்லீக் ஜமாஅத், ஜமாஅதே இஸ்லாமி மற்றும் தௌஹீத் ஜமாஅத் அமைப்புகளைச் சேர்ந்த சுமார் 150 இற்கும் மேற்பட்ட உலமாக்கள் ஒன்றிணைந்து வேற்றுமையில் ஒற்றுமையுடன் 'துரறு உலமா திஹாரிய' என்ற அமைப்பை உருவாக்கி ஒற்றுமையென்ற ஒரே கொடியின் கீழ் சகோதரத்துவத்துடன் இணைந்து செயற்படுவது முஸ்லிம் சமூகத்திற்கு நல்லதோர் முன்னுதாரணமாகத் திகழ்கின்றது என இஸ்லாமிய ஒற்றுமை பேரவையின் ஸ்தாபகர்களில் ஒருவரான அல்-ஹாஜ் அஸ்-ஸெய்யித் கலாநிதி ஹஸன் மௌலானா அல்-காதிரி மனமகிழ்ச்சியுடன் தெரிவித்தார்.

அல்-ஆலிம் முஹம்மத் பர்தியுடைய (ஹஸனி,அஸ்ஹரி) தந்தை அல்-ஹாஜ் முஹம்மத் நாஸிர் கடந்த சனிக்கிழமை காலம் சென்றதை முன்னிட்டு அவருக்கு அனுதாபம் தெரிவிப்பதற்காக திஹாரியிலுள்ள அவரது இல்லத்துக்கு இஸ்லாமிய ஐக்கிய பேரவை ஸ்தாபகர்கள் சார்பில் விஜயம் செய்த வேளையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

முஸ்லிம்களுக்கிடையே ஏற்படும் பிளவுகளை இல்லாதொழித்து முஸ்லிம் சமூகத்தின் எதிர்காலத்தை கருத்தில் கொண்டு துரறு உலமா திஹாரிய அமைப்பினர் வேற்றுமையில் ஒற்றுமை காணும் இந்த நல்ல வேலைத்திட்டத்தை இலங்கையில் வாழும் சகல முஸ்லிம்களும் முன்னுதாரணமாக எடுத்துக்கொள்வதுடன், முஸ்லிம்களை ஒற்றுமைப்படுத்துவதற்கான முயற்சிகளை முஸ்லிம் சமூகத்திலுள்ள உலமாக்கள், புத்திஜீவிகள் மற்றும் சமூக சேவைகள் அமைப்புகள் முன்வந்து ஒன்றிணைந்து முழுமூரமாகச் செயற்படுவது காலத்தின் தேவையாகும் என கலாநிதி ஹஸன் மௌலானா மேலும் தெரிவித்தார்.

அல்-ஆலிம் முஹம்மத் பர்தி(ஹஸனி,அஸ்ஹரி) அவர்கள், துரறு உலமா திஹாரிய அமைப்பின் முக்கியமான ஒருவராகவும் அஹ்லுஸ் ஸுன்னத்-வல்-ஜமாஅத் தரீக்காவை சேர்ந்த மூத்த உலமாக்களில் ஒருவராகவும் முஸ்லிம் சமூகத்திற்கு செயலாற்றி வருகின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

துரறு உலமா திஹாரிய அமைப்பு கடந்த மூன்று வருடங்களுக்கு முன் ஆரம்பிக்கப்பட்டு பல சமூக பணிகளை ஒற்றுமையுடன் செய்து வருகின்றமையும் குறிப்பிடத்தக்கதாகும். இந்த விஜயத்தின் போது இஸ்லாமிய ஐக்கியப் பேரவையின் நிர்வாக உத்தியோகத்தர் பியாஸ் முஹம்மத், துரறு உலமா திஹாரிய அமைப்பின் முக்கியமான மூத்த உலமாக்கள் மற்றும் அல்-ஆலிம் பர்தி ஹஸனி அவர்களின் சகோதரர்கள், குடும்ப அங்கத்தவர்களென பலரும் கலந்து கொண்டனர். (05)

காலைக்கதிர் Kalaikkathir

# யாழில் பொலிஸார் தாக்கினர் என முறையிட்ட மாணவனுக்கு உளவள ஆலோசனை தர உத்தரவு

போதைப்பொருள் பாவித்த குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட பல்கலைக்கழக மாணவனை மல்லாகம் நீதிவான் நீதிமன்றம் நேற்று (புதன்கிழமை) சரீரப் பிணையில் செல்ல அனுமதித்தது.

வட்டுக்கோட்டை பகுதியைச் சேர்ந்த பல்கலைக்கழக மாணவனொருவர் வட்டுக்கோட்டை பொலிஸார் தன்னை தாக்கியதாக தெரிவித்து மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். பிராந்தியப் பணிமனையில் முறைப்பாடளித்து விட்டு வைத்தியசாலையில் சிகிச்சைக்கு சேர்க்கப்பட்டார்.

இதன்போது குறித்த நபர் போதைப்பொருள் பயன்படுத்தியமை யாழ்ப்பாணம் போதனா வைத்திய சாலையில் மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையில் உறுதியாகியிருந்தது.

இந்நிலையில், குறித்த மாணவனை கைது செய்த வட்டுக்கோட்டை பொலிஸார் நேற்று குறித்த நபரை மல்லாகம் நீதிமன்றில் முற்படுத்தினர்.

வழக்கை விசாரித்த நீதவான் குறித்த நபரை பிணையில் செல்ல அனுமதித்தார்.

அத்துடன், பல்கலைக்கழக மாணவர் என்ற அடிப்படையில் எதிர்காலத்தைக் கருத்தில் கொண்டு குறித்த நபரை புனர்வாழ்வு முகாமுக்கு அனுப்பாது தொடர்ச்சியாக கண்காணிக்கவும் உளவள ஆலோசனைக்கும் சமூக சீர்திருத்த நன்னடத்தை பிரிவுக்கு மல்லாகம் நீதிவான் எம்.கே.முகமட் கில்மி உத்தரவிட்டார். (05)

# செட்டிகுளத்தில வாழ்வாதார உதவி

வவுனியா, செட்டிகுளம் பகுதியில் நீண்ட காலமாக குடிநீர் பிரச்சினையால் தவித்து வந்த குடும்பமொன்றுக்கு பிரான்சில் வசித்து வரும் சமூக செயற்பாட்டாளரான கந்தையா ஸ்ரீமுருகதாஸ் என்பவர் உதவிக்கரம் நீட்டியுள்ளார்.

செட்டிகுளம், முகத்தான்குளம், இரண்டாம் பண்ணையில் மூன்று பிள்ளைகளுடன் வசித்து வரும் விசேட தேவைக்குப்பட்ட குடும்பமொன்றுக்கே உறவுகளின் பாலம் என்ற அமைப்பின் ஊடாக மோட்டருடன் கூடிய குழாய் கிணறு மற்றும் நீர் தொட்டி என்பன அமைத்துக்கொடுக்கப்பட்டுள்ளன.

குறித்த குடும்பத்துக்கு வீட்டுடன் கூடிய வீட்டுத் தோட்டத்திற்கான காணிகள் இருந்துள்ளபோதும் நீர் இன்மை காரணமாக அவர்களால் வீட்டுத் தோட்டத்தில் ஈடுபட முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

இதனையடுத்து அக் குடும்பத்தின் தலைவி, தமது வாழ்வாதாரத்தைக் கொண்டு நடத்துவதற்கும், தனது மூன்று பிள்ளைகளையும், விசேட தேவைக்குப்பட்ட கணவரை கவனித்துக் கொள்வதற்காகவும் நாளாந்தம் கூலி வேலைக்கு சென்றுவந்துள்ளார்.

இந்நிலையிலேயே குறித்த குடும்பத்துக்கு உதவும் விதமாக குடிநீர் திட்டம் வழங்கி வைக்கப்பட்டுள்ளது.

செட்டிகுளம், முகத்தான்குளம் கிராம அலுவலர் எஸ்.ரஞ்சினி தலைமையில் நடைபெற்ற இந் நிகழ்வில் செட்டிகுளம் பிரதேச செயலாளர் இ.பிரதாபன், செட்டிகுளம் பிரதே செயலக இந்து கலாசார உத்தியோகத்தர் சிவ.கஜன், ஊடகவியலாளர்களான ந.கபில்நாத், கி.வசந்தரூபன், திருமதி சி.திவியா, வ.பிரதீபன், சமூக செயற்பாட்டாளர் திருமதி ஹெலன்மேரி மற்றும் அப்பகுதி மக்கள் எனப் பலரும் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (05)

# கிளிநொச்சி மாவட்ட செயலருக்கு பெபரவரி 13ஆம் திகதி மணி விழா

கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபராக சேவையாற்றிய றூபவதி கேதீஸ்வரனுக்கு மணிவிழா ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

கிளிநொச்சி மாவட்டத்திலேயே கல்வி பயின்று அம்மாவட்டத்தில் தனது சேவைக்காலத்தை நிறைவு செய்யும் மாவட்ட அரசாங்க அதிபர் றூபவதி கேதீஸ்வரன் எதிர்வரும் 13 ஆம் திகதியுடன் ஓய்வு பெறுகின்றார்.

கிளிநொச்சி மாவட்டம் தனி மாவட்டம் ஆக்கப்பட்ட பின்னர் அம்மாவட்டத்தில் கல்வி பயின்று அரச நிர்வாக சேவைக்கு தெரிவான முதலாவது அரச நிர்வாக சேவை அதிகாரி இவர் என்பது இங்கு விசேட அம்சமாகும்.

இலங்கை அரச நிர்வாக சேவையில் ஒரு பெண்ணாக துணிந்து நின்று 32 ஆண்டுகள் கடமையை நிறைவேற்றியதுடன், கிளிநொச்சி மாவட்டத்தின் முதல் பெண் அரச அதிபருமாக வரலாற்றில் இடம்பிடித்துள்ளார். முன்னேறத் துடிக்கும் பெண்களுக்கு எடுத்துக்காட்டாகவும், துணிச்சல் மிக்க பெண்ணாகவும், பல்வேறு நெருக்கடிகளை கடந்து துணிச்லுடன் பயணித்து மணிவிழா காணும் றூபவதி கேதீஸ்வரனின் பணிகளையும், சேவைகளையும் பலரும் பாராட்டி வருகின்றனர்.

அவரது சேவையைப் பாராட்டும் வகையில் மணிவிழாவினை எதிர்வரும் 13ம் திகதி கிளிநொச்சிக் கூட்டுறவுச் சபை மண்டபத்தில் நடத்துவதற்கான ஏற்பாடுகள் இடம்பெற்று வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது. (05)

## இலங்கையைக் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பெப்ரவரி மாதத்தைவிட சிறந்த நிலைக்கு நாடு முன்னேறியுள்ளது.

கடந்த ஆண்டு பெப்ரவரி மற்றும் இந்த பெப்ரவரி வரையான நமது பொருளாதார குறிகாட்டிகள் சிலவற்றை நான் எடுத்துக் காட்ட விரும்புகிறேன்.

கடந்த ஆண்டு பணவீக்கம் 50.06 சதவீதமாக இருந்தது. இன்று அது 6.4 சதவீதமாகக் குறைந்துள்ளது. உணவுப் பணவீக்கம் 54.4 சதவீதமாக இருந்தது. இன்றுஅது 3.3சதவீதமாக உள்ளது. அன்று ஒரு டொலரின் பெறுமதி 363 ரூபாய். இன்று 314 ரூபாய்.

2022ஆம்ஆண்டின்இறுதியில், வரவு செலவுத் திட்ட முதன்மை பற்றாக்குறை மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 3.7 சதவீதமாக இருந்தது. ஆனால் 2023 இல் முதன்மைவரவுசெலவுத்திட்டத்தில் உபரியை ஏற்படுத்த முடிந்தது. சுதந்திரத்திற்குப் பின்னரான 76 வருடங்களில் இலங்கையானது முதன்மையான வரவு செலவுத் திட்ட உபரியைஏற்படுத்திய 6ஆவது சந்தர்ப்பம் இதுவாகும்.

2022ஆம்ஆண்டின்இறுதியில், மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 1.9 சதவிகிதம் இருப்புப் பற்றாக்குறை காணப்பட்டது. 2023ஆம்ஆண்டின் இறுதியில், எங்களால் உபரியை ஏற்படுத்த முடிந்தது. 1977ஆம் ஆண்டுக்குப் பிறகு நிலுவைத் தொகை உபரியை ஏற்படுத்திய முதல் சந்தர்ப்பம் இதுவாகும்.

2023இல் 28 சதவீதமாக இருந்த வட்டி விகிதம் தற்போது 12 சதவீதமாக உள்ளது. 2022 ஆம் ஆண்டின் இறுதியில், 52 பிரதான அரச நிறுவனங்கள் 745 பில்லியன் ரூபா நட்டம் ஈட்டின. செப்டம்பர் 2023இற்குள், இந்த 52 நிறுவனங்களும் 313 பில்லியன் ரூபாய்லாபம்ஈட்டியுள்ளன. ஆனால் இந்நிறுவனங்கள் கடன் சுமையை தாங்க முடியாத நிறுவனங்களாக காணப்படுகின்றன.

தெரிவுசெய்யப்பட்ட கடனைச் செலுத்த முடியாத நிலையை 2022 ஏப்ரல் 12 ஆம் திகதி இலங்கை உத்தியோகபூர்வமாக அறிவித்தது. அந்தச் சமயம் எமது அந்நியச் செலாவணி கையிருப்பு பூஜ்ஜியம் வரை சரிந்தது. தற்போது அந்த நிலை மாறிவிட்டது. 2023 டிசெம்பர் நிலவரப்படி, நமது அந்நியச் செலாவணி கையிருப்பு 4.4 பில்லியன் அமெரிக்க டொலர்களாகும்.

குறுகிய காலத்தில், சுற்றுலாத் துறையில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் அடைந்துள்ளோம். 2022 ஆம் ஆண்டில் நம் நாட்டிற்கு வந்த சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை 194,495 ஆகும். 2023 இல் அந்த எண்ணிக்கையை 1,487,303 ஆக அதிகரிக்க முடிந்தது. இந்த ஆண்டு ஜனவரியில் 200,000 இற்கும் அதிகமான சுற்றுலாப் பயணிகள் வருகை தந்தனர்.

2023இல் பல சாதகமான நகர்வுகளை முன்னெடுத்தோம். கோட்டா முறையில் வழங்கப்பட்ட எரிபொருள் விநியோக முறை முடிவுக்குக் கொண்டுவரப்பட்டது. தற்போது தொடர்ந்து மின்சாரம் விநியோகிக்கப்படுகிறது. எரிபொருள் தட்டுப்பாடு இல்லை. விவசாயத்திற்குத் தேவையான உரங்கள் தட்டுப்பாடின்றிக் கிடைக்கின்றன. மீனவர்களுக்கு எரிபொருள் தட்டுப்பாடு இல்லை.

வாகனங்கள் தவிர அனைத்து இறக்குமதிக் கட்டுப்பாடுகளும் இப்போது நீக்கப்பட்டுள்ளன. நாட்டுக்கு அத்தியாவசிய உணவு மற்றும் மருந்துகளை இறக்குமதி செய்வதில் எந்தப் பிரச்சினையும் இல்லை. மேலும், உற்பத்தித் தொழிற்துறைகளுக்குத் தேவையான மூலப் பொருட்களின் விநியோக வலையமைப்பில் எந்தத் தடையும் இல்லை.

2022ஆம்ஆண்டின்இறுதியில் மொத்த உள்நாட்டு உற்பத்தி 7.8 சதவிகிதமாகச் சுருங்கியது. 2022 முதல், தொடர்ந்து 6 காலாண்டுகளில் எதிர்மறையாக இருந்தது. ஆனால் 2023ஆம் ஆண்டின் மூன்றாம் காலாண்டில் 1.6 சதவீத வளர்ச்சியை எட்டினோம்.

நமது பொருளாதாரம் விண்கல் வேகத்தில்சரிந்தது. ஆனால்தற்போது எமக்குஅதனைமாற்றமுடிந்துள்ளது. அதை மீண்டும் ராக்கெட் வேகத்தில் உயர்த்தியுள்ளோம். நாங்கள் வீ(ஏ) வடிவ மீட்பு அல்லது வீ(ஏ) வடிவ மீட்சியைப் பெற்று வருகிறோம்.

நாம் அடைந்த விசேடமான வெற்றியாக அதனைக் குறிப்பிடலாம். வீழ்ச்சியடைந்த நாடுகளின் பொருளாதார மீட்சி மிகவும் கடினமானது மற்றும் வேதனையானது. ஆனால் ஏனைய நாடுகளைப் போல நீண்ட கால சிரமங்கள் மற்றும் வலிகள் இல்லாமல் நமது பொருளாதாரத்தை மீட்டெடுக்க எம்மால் முடிந்தது.

நான் ஒரு உதாரணத்தைக் கோடிட்டுக் காட்டுகிறேன். கிரேக்கம் கடன் செலுத்த முடியாமல் 2009ஆம் ஆண்டு பொருளாதார நெருக்கடியைச் சந்தித்தது. அதன் பின்னர் முழு நாடும் மிகவும் கடினமான சூழ்நிலையில் தனது பொருளாதாரத்தைக் கட்டியெழுப்ப முயற்சித்தது. அந்தக் காலத்தில் பல நெருக்கடிகளைச் சந்தித்தது. மீண்டும்அந்தப்பொருளாதாரத்தைக் கட்டியெழுப்ப சுமார் 10 வருடங்கள் தேவைப்பட்டது.

நமது நாடு குறுகிய காலத்தில் இத்தகைய விதிவிலக்கான சாதனைகளை எட்டுவது உண்மையில்உலகசாதனையாகும். எங்களால் எப்படி அவ்வாறான சாதனைப் படைக்க முடிந்தது?

2022ஆம் ஆண்டு முழுவதும் பொருளாதாரம்சரிந்தது. 2022 ஆம் ஆண்டைவிட 2023இல் ஓரளவு பொருளாதார முன்னேற்றத்தை அடைய முடிந்தது. இது தற்செயலாக நடந்ததல்ல. மிகவும் கவனமாகவும் தொலைநோக்குடனும் தயாரிக்கப்பட்ட நுட்பமான பொருளாதாரக் கொள்கையை நடைமுறைப் படுத்தியதால் இந்த முன்னேற்றம் ஏற்பட்டது.

நாங்கள் தயாரிக்கும் கொள்கைகள், நடவடிக்கைகள், திட்டங்கள் அனைத்தையும் அவ்வப்போது நான் நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்தேன். மக்கள் முன்னிலையிலும் அவ்வப்போது பகிரங்கமாக அறிவித்தேன். நாடாளுமன்றத்திற்கு உள்ளேயும் வெளியேயும் அவை பற்றிக் கலந்துரையாடவும் விவாதிக்கவும் வாய்ப்பு வழங்கப்பட்டது. அந்தக் கொள்கைகள் ஒருபோதும் மறைக்கப்படவில்லை. ஒவ்வொரு நடவடிக்கையையும் வெளிப்படைத்தன்மையுடன்செய்துள்ளோம்.

அரசியல் ஆதாயத்துக்காக நான் ஒருபோதும் முடிவுகளை எடுக்கவில்லை. ஒவ்வொரு முடிவையும் நாட்டு நலன் கருதியே எடுத்தேன். எமக்கு பாதகமாக இருந்தாலும் நாட்டுக்கு நன்மை பயக்கும் முடிவுகளை எடுக்க நாங்கள்தயங்கவில்லை. தனிப்பட்ட இலாபங்களைஒதுக்கிவைத்துவிட்டு நாட்டுக்கு சரியான கொள்கைகளை செயற்படுத்தினோம்.

நாடாளுமன்றத்திலுள்ள சில தரப்பினர் அந்த முடிவுகளை எதிர்த்தனர். ஆனால் பெரும்பான்மையானோர் தமது தனிப்பட்ட அரசியல் நலன்களையும் இலக்குகளையும் பொருட்படுத்தாமல் நாட்டின் நலனுக்காக அந்த முடிவுகளுக்கு ஆதரவாக கையுயர்த்தினர். எதிர்காலத்தில் தேசத்தின் பாராட்டை அவர்கள் பெறுவார்கள் என்று நான் நம்புகிறேன்.

நாங்கள் இந்தப் பயணத்தில் படிப்படியாக முன்னேறிச் சென்றோம். 2022ஆம் ஆண்டு சமர்ப்பிக்கப்பட்ட இடைக்கால வரவு செலவுத் திட்டத்தின் ஊடாக அன்றிருந்த நாட்டின் உண்மையான நிலைமையை நான் எடுத்துக் காட்டினேன். பொருளாதார வீழ்ச்சியைத் தடுப்பதே இடைக்கால வரவு செலவுத் திட்டத்தின் நோக்கமாக இருந்தது. 2023ஆம்ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தின் ஊடாக பொருளாதாரத்தை நிலையான பாதைக்கு வழிநடத்தும் பல திட்டங்களை முன்வைத்தேன். பொருளாதார வளர்ச்சியை விரைவுபடுத்த தேவையான மறுசீரமைப்புகளின்ஆரம்பகட்டமாக 2024ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்ட முன்மொழிவுகள் முன்வைக்கப்பட்டன.

சிரமத்துடனும்சிலசமயங்களில் தயக்கத்துடனும் நாங்கள் செயல்படுத்திய பொருளாதார மறுசீரமைப்புகள் மற்றும் கொள்கைகள் காரணமாக, நாங்கள் தற்போது நிலையான பொருளாதாரத்தைநிறுவுவதற்கானபாதைக்கு பிரவேசித்திருக்கிறோம். அத்தோடு சர்வதேசநிதி நிறுவனங்கள் எங்கள் இலக்குகள்மற்றும்பயணம்குறித்து மகிழ்ச்சியடைந்துள்ளன.

இருண்ட பொருளாதார சுரங்கத்திற்குள் சிக்கியிருந்த நாம் தற்போது சுரங்கத்தின் முடிவில் வெளிச்சத்தைக் காண்கிறோம். தீவிர சிகிச்சைப் பிரிவில் இருந்த பொருளாதாரம்தற்போது ஆபத்தான நிலையில்இருந்துமீட்கப்பட்டுள்ளது.

கடந்த காலங்களில் ஏற்பட்ட கடுமையான பொருளாதார நெருக்கடி காரணமாக, நாட்டு மக்கள் பலர் நினைத்துப் பார்க்க முடியாத இன்னல்களை எதிர்நோக்க வேண்டியிருந்தது. சிலர் தொழில்களை இழந்தனர். மேலும் சிலர் தங்கள் வருமான வழிகளைஇழந்தனர். சிலர்தொழில் வாய்ப்புகளைஇழந்தனர். இன்னும் சிலர் உரிமைகளை இழந்தனர். பெரும்பாலான துன்பங்கள் சாதாரண மக்களுக்குத்தான் சொந்தமானது.

இழந்தவாய்ப்புகளைகொஞ்சம் கொஞ்சமாக மக்களுக்கு வழங்க தற்போது நாம் முயற்சிக்கிறோம். மக்களின் இழந்த உரிமைகளை மீட்டெடுக்கும் வேலைத் திட்டத்தை 'உரித்து' என்ற பெயரில் அண்மையில் ஆரம்பித்தோம். உரித்துவேலைத்திட்டத்தின் ஊடாக இரண்டு அடிப்படை விடயங்களில் கவனம் செலுத்தி வருகின்றோம். ஒன்று காணி மற்றது வீடு.

இங்கு காணி உரிமை பிரதான இடத்தைப் பெறுகிறது. 1897 தரிசு நிலச் சட்டத்தின் மூலம் மக்களின் காணி உரிமையை காலனித்துவப் பிரித்தானிய அரசு பெற்றது. சுதந்திரத்திற்குப் பின்னர் ஆட்சிக்கு வந்த எந்த ஒரு அரசாங்கமும், பறிக்கப்பட்ட காணி உரிமைகளை மக்களிடம் மீள வழங்குவதற்குஎந்தநடவடிக்கையும் எடுக்கவில்லை. அந்த காணி உரிமையை மீள வழங்கும் பணியைநாம்ஆரம்பித்துள்ளோம். இரண்டு மில்லியன் மக்களை காணி உரிமையாளர்களாக எமது சமூகத்தில்இணைக்கின்றோம். இது வரலாற்று முக்கியத்துவம்வாய்ந்த மற்றும் புரட்சிகரமான நகர்வாகும். அரிசியில் தன்னிறைவு பெற பல தசாப்தங்களாக விவசாயிகள் அனுபவித்த கடின உழைப்பக்கு வழங்கப்படும் ஒரு கௌரவமாகும்.

இந்நாட்டு மக்களில் மூன்றில் ஒரு பகுதியினருக்கு முறையான வருமானம் கிடையாது. பொருத்தமான வீடுஇல்லை. இந்த மக்களுக்கு வருமானவழிமற்றும்வீட்டுஉரிமை வழங்க எதிர்காலத்தில் நடவடிக்கை எடுப்போம். நகர்புர, குறைந்த வருமானமுடைய 50,000இற்கும் மேற்பட்டோருக்கு முழுமையான வீட்டுரிமை வழங்கப்படும்.

வெற்றிகரமான பொருளாதார அபிவிருத்திப்பாதையில்பயணிக்கும் போதுநாட்டின்அனைத்துத்தரப்பினர் குறித்தும்விசேடகவனம்செலுத்தப்பட வேண்டும். குறிப்பாக வறிய மற்றும் நிர்க்கதியானமக்கள்குறித்துகவனம் செலுத்த வேண்டும். கடுமையான பொருளாதார நெருக்கடியின் மத்தியிலும் மக்கள் நலனுக்காக நடவடிக்கை எடுத்தோம்.

இந்தஆண்டுஅஸ்வெசுமஊடாக 24 லட்சம் பேருக்கு நன்மைகள் அளிக்க எதிர்பார்க்கப்படுகிறது. இதன் மூலம் நாட்டின் கீழ் மட்டத்தில் வாழும் மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த முடியும். நமது நாட்டின் வரலாற்றில் இவ்வளவு பெரிய தொகை நிதி மானியம் வழங்கப்படவில்லை. வரும் பண்டிகை காலத்தில் குறைந்த வருமானம்பெறும்குடும்பங்களுக்கு தலா 20 கிலோ வீதம் அரிசி, நிவாரணமாக வழங்கப்படும்.

2022 ஒகஸ்ட் மாதமளவில், ஜனாதிபதி நிதியம் முற்றிலும் செயலிழந்தது. 9,000இற்கும் மேற்பட்ட மருத்துவ உதவிக்கான விண்ணப்பங்கள், பணம்இல்லாமல் குவிந்திருந்தன. ஒகஸ்ட் முதல் டிசம்பர் வரை மேலும் 4,000 விண்ணப்பங்கள்வரைகிடைத்தன. அவை அனைத்திற்கும் பணம் செலுத்தப்பட்டது. 2023 ஆம் ஆண்டில் 4,917 நோயாளர்களுக்கு 915மில்லியன்ரூபாவழங்கப்பட்டது.

தற்போதுபணம்செலுத்துவதற்கு பலமாதங்கள்காத்திருக்கவேண்டிய அவசியமில்லை. மூன்று அல்லது ஐந்து வேலை நாட்களுக்குள் பணம் செலுத்தும் நடைமுறை ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இந்த ஆண்டு அனைத்து மருத்துவ உதவிகளையும் 50 சதவீதத்தில் இருந்து 100 சதவீதமாக உயர்த்த நடவடிக்கை எடுக்கப்படும். இந்த உதவித் தொகைகளுக்கு மேலதிகமாக ஜனாதிபதி நிதியத்தின் ஊடாக பாடசாலை மாணவர்களுக்கு புலமைப் பரிசில் வழங்கும் வேலைத்திட்டமும் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

அரசு ஊழியர்களுக்கு நாம் விசேட கொடுப்பனவு ஒன்றை வழங்கினோம். ஓய்வூதியம் பெறுவோரின் சம்பளத்தை உயர்த்தினோம். 2016 முதல் 2020 வரை ஓய்வு பெற்ற அரசு ஊழியர்களுக்கு சம்பள முரண்பாடு உள்ளது. அந்த பிரச்சினைக்கு விரைவில்தீர்வுவழங்கநடவடிக்கை

தொடர்ச்சி 11ம் பக்கம்....

## சிறுவர்கள்,...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கொண்டிருக்கும் இவ்வேளையில், பாடசாலை மற்றும் வீடு உள்ளடங்கலாக அனைத்து மட்டங்களிலும் சிறுவர்களுக்கெதிரானஉடல்ரீதியான தண்டனையை முற்றாக தடுக்க வேண்டியதன் முக்கியத்துவத்தை வலியுறுத்தியிருப்பது இந்தத் திருத்தத்தின் புரட்சிகரமான முன்னேற்றமாகும்' என்றுயுனிசெப் நிறுவனத்தின் இலங்கை நாட்டுப் பிரதிநிதி, கிறிஸ்டியன் ஸ்கூக் குறிப்பிட்டார்.

அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரவிக்கப்பட்டுள்ளதாவது:

இலங்கையின் சிறுவர்கள் மற்றும் இளையோர் கட்டளைச் சட்டத்தில் நீண்டகாலமாக எதிர்பார்த்திருந்த திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டு, அவை 2024 ஜனவரி முதலாம் திகதி முதல் அமுலுக்கு வந்துள்ளன. இது இலங்கை சிறுவர்களின் உரிமைகள் மற்றும் நலன்களைப் பாதுகாப்பதற்கான முக்கியமானதொரு முன்னெடுப்பாகும்.

1939 ஆம் ஆண்டு முதல் இலங்கைச் சிறுவர்களுடன் தொடர்புடைய நீதியை ஒழுங்குபடுத்தும் ஒரு சட்டவாக்கமாக இருந்துவருகின்ற இக்கட்டளைச்சட்டமானது, ஏற்கனவே 16 வயதிற்குப்பட்ட சிறுவர்களின் பாதுகாப்பு தொடர்பாக கவனம் செலுத்தியதுடன் தற்போது இந்தத் திருத்தத்தினூடாகஅந்தவயதெல்லை 18 ஆக உயர்த்தப்பட்டுள்ளது. அத்துடன், சிறுவர்கள் மற்றும் கட்டிளமைப் பருவத்தினர் மீது பெற்றோர், ஆசிரியர்கள் அல்லது பாதுகாவலர்கள் பிரயோகிக்கும் உடல் ரீதியான தண்டனைகளை நியாயப்படுத்திஅவர்களுக்கெதிரான சட்ட ஏற்பாடுகளுக்கு இடங்கொடுக்காத குறித்த கட்டளைச் சட்டத்தின் ஒரு உறுப்புரை அல்லது ஒரு பகுதி இத்திருத்தத்தினால் இரத்துச்செய்யப்பட்டுள்ளது.

இலங்கைச்சட்டங்களைசிறுவர் உரிமைகள் தொடர்பான சர்வசேதரநியமங்களுடன்,குறிப்பாகசிறுவர் உரிமைகள் தொடர்பான சர்வதேச சமவாயத்துடன் சீரமைப்பதற்கு இத்திருத்தங்கள் பங்களிப்புச் செய்வது மாத்திரமன்றி, நாட்டில் சிறுவர்கள் மற்றும் கட்டிளமைப் பருவத்தினரின் தேவைகள் மற்றும் சவால்களுக்கு உரிய தீர்வுகளை வழங்குமென்றும் எதிர்பார்க்கப்படுகின்றது.

இத்திருத்தங்கள் சட்டத்திற்கு முரண்படும் சிறுவர்களை கையாளும் நடவடிக்கைகளில் புரட்சிகமானதொரு நகர்வாக இருக்கும்என்பதில்சந்தேகமில்லை. ஏனெனில், இத்திருத்தங்களுக்கு முன்பு குற்றமிழைத்த 16 - 18 வயது சிறுவர்கள் வயதுவந்தோரின்சிறைக்கூடங்களிலேயே வைக்கப்பட்டனர். அங்கு அவர்களுக்குபொருத்தமானபுனர்வாழ்வுத் திட்டங்களோ அல்லது பராமரிப்பு நடவடிக்கைகளோஇருக்கவில்லை. என்றாலும், தற்போது அமுலுக்கு வந்திருக்கும் கட்டளைச் சட்டத்தின் திருத்தங்களின் விளைவாக இத்தகைய சிறுவர்கள் மாகாண நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்பு திணைக்களங்களின் மேற்பார்வையின் கீழ் புனர்வாழ்வுக்கு உட்படுத்தப்படுவதுடன் இங்கு ஒழுக்காற்று அணுகுமுறையைவிடபுனர்வாழ்வு நடவடிக்கைகளுக்கு முக்கியத்துவமளிக்கப்படும்.

ஒரு பிள்ளையை தடுப்புக் காவலில்வைப்பதுஇறுதிமுயற்சியாக இருக்க வேண்டுமென்றும் அது மிகவும் குறுகிய காலத்திற்கு மாத்திரம்இருக்கவேண்டுமென்றும் சிறுவர் உரிமைகளுக்கான சமவாயம் வலியுறுத்துகின்றது. ஏனெனில், நிறுவனமயமாக்கல் பிள்ளையின்அபிவிருத்திக்கும்மீள் ஒருங்கிணைப்பதற்கும்தடையாக இருந்து வன்முறை மற்றும் வறுமைக்குஇட்டுச்செல்லும்என்றும் சான்றுகள் உறுதிப்படுத்துகின்றன.

எனவே, இளம்பருவக் குற்றவாளிகளுக்கு தடுப்புக்காவல் நடவடிக்கைகளுக்குப்பதிலாகமிகவும் வினைத்திறனுடையசிறுவர்களுக்கு பாதுகாப்பான குடும்ப-மைய புனர்வாழ்வு நடவடிக்கைகளை முன்னுரிமைப்படுத்துமாறு யுனிசெப் நிறுவனம் நீதித்துறை, நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்புத் துறைகளில் பணியாற்றும்கரிசனையாளர்களை வேண்டிக்கொள்கின்றது.

யுனிசெப் நீண்டகாலமாக உலகளாவிய சிறுவர்களின் உரிமைகளுக்காக குரல்கொடுத்து வருகின்ற ஒரு நிறுவனம் என்ற வகையில் இலங்கையின் இத்திருத்தங்களிலும் அதன் ஆதரவு ஆழமாக வேரூன்றியுள்ளது. அந்த வகையில், சிறுவர்களுக்கான இலங்கையின் நீதித்துறை பற்றி யுனிசெப் நிறுவனம் 2023 ஆம் ஆண்டு நடாத்திய ஒரு ஆய்வில் முக்கியமானதரவுஇடைவெளிகளை அடையாளப்படுத்தியதுடன் சிறுவர்களுக்கான நீதித்துறைப் பாதுகாப்பின் பொருத்தப்பாடு மற்றும் வினைத்திறனை உறுதிப்படுத்துவதற்காக கூடிய விரைவில் மேற்கொள்ள வேண்டிய மறுசீரமைப்பு நடவடிக்கைகளும் கோடிட்டுக்காட்டப்பட்டுள்ளது.

எனவே, சிறுவர்கள் மற்றும் இளையோர் கட்டளைச் சட்டத்தில் செய்துள்ள திருத்தத்தில் இந்தப் பரிந்துரைகள் கருத்திற்கொள்ளப்பட்டுள்ளதுடன்பிள்ளையின் நலனை முன்னுரிமைப்படுத்தும் விதத்தில் நீதித்துறையைக் கட்டியெழுப்புவதற்கான நடவடிக்கைகளும் உள்ளடக்கப்பட்டுள்ளன. சிறுவர்கள் மற்றும் இளையோர் கட்டளைச் சட்டத்தின் திருத்தங்களை நடைமுறைப்படுத்துவதற்கான இலங்கை அரசாங்கத்தின் தீர்மானமானது சர்வதேச சட்டத்தின்கீழ் அதன் கடப்பாடுகளை பூர்த்திசெய்வதையும் நாட்டின் இளவயதினரின் நலன்களை முன்னுரிமைப்படுத்துவதற்கான அர்ப்பணிப்பையும் வலியுறுத்துகின்றது.

## ஒற்றுமைக்கு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நடவடிக்கை மீது தாக்குதல் நடத்தப்பட்டள்ளது. ஜனாதிபதி ரணில்விக்கிரமசிங்கஎதிர்க்கட்சியில் அமர்ந்திருக்கும் போது இவ்வாறு போராட்டங்களின் மீது தாக்குதல் நடத்தும் நிலைப்பாட்டினைக் கொண்டிருக்கவில்லை.

எனினும், அவர் ஜனாதிபதியாக பதவியேற்றதன் பின்னர் தான் அவ்விதமாக செயற்படுகின்றார். ஜனாதிபதி நாடாளுமன்றத்தில் உறுப்பினர்களுக்கு அழைப்பு விடுகின்றார். ஆனால் வெளியில் அவர்களது சிறப்புரிமைகளை மீறி அவர்கள் மீது தாக்கதல் நடாத்தி சீண்டுகின்றார்.

உடல்வலிமையைப்பயன்படுத்தி எமது ஒத்துழைப்புக்களைப் பெற முயற்சிப்பாராக இருந்தால் அது சாத்தியப்படாது என்பதை அவருக்கு தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றோம்.

நான் 35ஆண்டுகளாக ஆளும், எதிர்க்கட்சி என்று மாறி மாறி இருந்திருக்கின்றேன. ஆனால் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பன்முகப்படுத்தப்பட்டநிதிவழங்காது தடுத்து நிறுத்தப்படவில்லை. ஆனால் இம்முறை ஆளும் தரப்பிற்கு வழங்கப்பட்டுள்ளது. ஆனால் எதிர்த்தரப்பிற்கு வழங்கப்படவில்லை. என்றார்

## ஜே.வி.பி. ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கலந்துரையாடப்பட்டுள்ளது.

இதேவேளை, அனுரகுமார திசாநாயக்க உள்ளிட்ட குழுவினர் குஜராத்தின் கைத்தொழில் அமைச்சருடனும் விசேட கலந்துரையாடலில் ஈடுபட்டதோடு, இந்திய அரசாங்கத்தின் அபிவிருத்தி திட்டத்தை முன்மாதிரியாகக் கொண்டுள்ள, குஜராத் மாதிரி திட்டத்தைஇதன்போதுமுன்வைத்து கலந்துரையாடப்பட்;டுள்ளது.

வலுசக்தி மறுசீரமைப்பு, விவசாயம் மற்றும் நீர், உட்கட்டமைப்புவசதிகள்அபிவிருத்தி, தொழில்துறை மற்றும் முதலீடு, சுகாதாரபாதுகாப்புமற்றும்மகளிரை வலுப்படுத்துதல் ஆகியன குஜராத் மாதிரிதிட்டத்தின்பிரதானஅம்சங்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அனுரகுமார திசாநாயக்க உள்ளிட்ட குழுவினர் இந்தியாவின் உத்தியோகபூர்வஅழைப்பிற்கிணங்க இந்த விஜயத்தில் ஈடுபட்டுள்ளனர்.

## இலங்கையைக் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எடுத்துவருகிறோம். அரசாங்கத்தின் வருமானம் அதிகரிக்கும் போது அதற்கு சமாந்தரமாக நிவாரணம் வழங்கவும் நடவடிக்கை எடுக்கப்படும்.

நாம் அடைந்துவரும் வளர்ச்சி சமூகத்தில்பேசப்படும்தலைப்புகளில் பிரதிபலிக்கிறது. சில காலம் முன்பு மின் வெட்டினால் ஏற்படும் பிரச்சினைகள் பற்றி பேசினோம். அப்போது, எவ்வளவு கொடுத்தாலும் தொடர்ச்சியாக மின்சாரம் வழங்க வேண்டும் என கோரிக்கை விடுக்கப்பட்டது.

இன்று நாம் மின்சாரக் கட்டணத்தைப் பற்றி பேசுகிறோம். சில காலத்திற்கு முன்பு கறுப்பு சந்தையில் ஒரு லீட்டர் பெட்ரோல் 3000 ரூபாவிற்கு வாங்கப்பட்டது குறித்து பேசப்பட்டது. எரிபொருள் வரிசைகளில் மூன்று அல்லது நான்கு நாட்கள் செலவிடுவது பற்றி பேசப்பட்டது. இன்று நாம் இலங்கையில் முதலீடு செய்யும் புதிய எரிபொருள் நிறுவனங்கள் பற்றி பேசுகிறோம். காய்கறி வாங்க வழியில்லை என்று பேசிக்கொண்டனர். இன்று ஒரு கேரட்டின் விலை பற்றி பேசுகின்றனர்.

புத்தகம் அச்சடிக்க காகிதம் இருக்கவில்லை என்று அன்று கூறப்பட்டது. இன்று வற் வரி பற்றிப் பேசுகிறோம். ஆம். வற் வரி பலருக்குசுமையாகஉள்ளது. இந்தப் பிரச்சினையை நாம் உணராமல் இல்லை. அந்தப் பிரச்சினைக்கு நாம் படிப்படியாக தீர்வுகளை வழங்கி வருகிறோம். 2022 இல் 437,547 வரிக் கோப்புகள் இருந்தன. 2023 இறுதியில் வரிக் கோப்புகளின் எண்ணிக்கை 1,000,029 ஆக உயர்ந்துள்ளது. இது 130 சதவீத அதிகரிப்பு. வரி வலையமைப்பு விரிவடையும் போது, ஒரு தனிநபருக்கோ அல்லது ஒரு நிறுவனத்திற்கோ ஏற்படும் வரிச்சுமைகுறையும். மேலும், நமது பொருளாதாரச் சீர்திருத்தங்களைச் செயல்படுத்துவதைத் தொடரும்போது, பொருளாதாரம் ஸ்திரமாகும்போது, வரிச்சுமையைக் குறைப்போம். 'வற்' வரியின் சதவீதத்தை திருத்துவதற்கான வாய்ப்பு ஏற்படும்.

மலையளவு கடனைச் சுமந்துகொண்டுதான் இதையெல்லாம் செய்கிறோம். கடந்த காலம் முழுவதும் இந்தக் கடனைத் திருப்பிச் செலுத்தும் முறை குறித்து மீள் திட்டத்தைத் தயாரிப்பதில் நாங்கள் கடுமையாக உழைத்து வந்தோம். முதல் கட்டமாக, உள்நாட்டுக் கடன் மறுசீரமைப்புத் திட்டம் நிறைவடைந்துள்ளது. இரண்டாவது கட்டமாக, வெளிநாட்டு கடன் வழங்குநர்களுடன் மறுசீரமைப்புதொடர்பானகொள்கை ரீதியான உடன்பாடு எட்டப்பட்டது. தனியார் கடன் வழங்குநர்களுடன் பேச்சுவார்த்தை நடந்து வருகிறது.

இந்த ஆண்டின் முதல் ஆறு மாதங்களில் இந்த சிக்கலான மறுசீரமைப்புத் திட்டத்தை நடைமுறைப்படுத்த எதிர்பார்க்கிறோம்.இதுநமதுபொருளாதாரத்தைஇயல்புநிலைக்குகொண்டு வருவதற்கான அடிப்படையாக அமையும். மேலும் கடன் அழுத்தத்திலிருந்துவிடுபடுவதற்கான பாதையின் மையமாக இது மாறிவிட்டது.

ஐ.எம்.எவ். உலக வங்கி மற்றும் ஆசிய அபிவிருத்தி வங்கி ஆகியவை இந்த ஆண்டு 2% முதல் 3% பொருளாதார வளர்ச்சியை எட்ட முடியும் என்று கணித்துள்ளன. 2025இல் அதை 5 சதவீதமாக உயர்த்த நடவடிக்கை எடுத்து வருகிறோம்.

2021 ஆம் ஆண்டில், தீயில் விழிந்திருந்த நாட்டை மீட்பதற்கான பணிகளை நாம் ஆரம்பித்தோம். 2021 ஐ விட சில விடயங்களை 2022ஆம் ஆண்டு மேம்படுத்திக் கொண்டோம். 2022 ஐ விட 2023 எல்லா வகையிலும் மேம்படுத்திக் கொண்டோம். 2024. இது இன்னும் சிறப்பாக இருக்கும் என்று கணிக்கப்பட்டுள்ளது. இந்தப் பாதையில் நாம் தொடர்ந்து பயணித்தால், 2025 இன்னும் சிறப்பாக இருக்கும்.

ஆனால் அதில் மாத்திரம் திருப்தி அடைய முடியுமா? வெளிநாடுகள் மற்றும் வெளி வணிக தளங்களில் இருந்து பெற்ற எந்த கடனையும் நாங்கள்இன்னும்செலுத்தவில்லை. ஆனால் மறுசீரமைப்புக்குப் பிறகு நாம் கடனைச் செலுத்தத் தொடங்க வேண்டும். கடனை மீளச் செலுத்த ரூபாவைப் போன்று டொலர்களும் எம்மிடம் இருக்க வேண்டும்.

2023 செப்டெம்பர் மாத மளவில் மொத்தக் கடன் 91 பில்லியன் டொலர்களாக காணப்பட்டது. இந்த கடன்களை செலுத்த நீண்ட காலம் அவசியப்படும். அதற்காக நாம் தேசிய மட்டத்தில் வருமானம் ஈட்ட வேண்டும். இல்லாவிட்டால் நாம் மீண்டும் கடன் பிடிக்குள் சிக்கிக்கொள்வோம்.

கடன் மறுசீரமைப்பு காரணமாக வருடமொன்றிற்காக நாம் செலுத்த வேண்டிய தொகையை குறைத்துக்கொள்ள முடியும். ஆனாலும் நாம் வருடத்திற்கு 3 பில்லியன் டொலர்கள் வரையில் செலுத்த வேண்டியிருக்கும். இவ்வாறு தொடர்ந்து கடனில் சிக்கியிருக்க முடியாது. அதேபோல் கடன் பெறவும் முடியாது.

அதேபோல் எமது வரவு செலவுக்கு இடையிலான சமநிலையைஉருவாக்குவதற்கான துரித முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும். எமது வரவு செலவு திட்ட துண்டுவிழும் தொகை பாரதூரமானது. இவ்வருடத்தில் 4,127 பில்லயன்களை அரசாங்கம் வருமானமாக ஈட்டியிருந்தாலும் அரசாங்கத்தின் செலவு 6,978 பில்லியன்களாகஉள்ளது. அவற்றில் 2,651 பில்லியன்கள் கடனுக்கான வட்டியாக செலுத்துவதற்காகவே செலவிடப்படுகிறது. இதன்மூலம் எங்களின் கடன் சுமையை உணர முடியும்.

1950 ஆம் ஆண்டுக்குப் பிறகு, நாங்கள் தொடர்ந்து கடன் வாங்கிவந்துள்ளோம். எல்லாவற்றுக்கும் கடன் வாங்கியுள்ளோம். ஆட்சியாளர்களும் கடன் வாங்கப் பழகினர். மக்களும் இந்தக் கடன் பொருளாதாரத்துக்கு ஏற்றார்போல் இசைவாக்கமடைந்தனர். அரிசி இலவசமாக வழங்கப்படும், மின் கட்டணத்தில் சலுகைகள் வழங்கப்படும், சம்பளம் அதிகரிக்கப்படும், இலட்சக்கணக்கில் அரச வேலை வாய்ப்புகள் வழங்கப்படும்.

இவ்வாறான தேர்தல் வாக்குறுதிகளை அளித்து ஆட்சிக்கு வந்ததும் அவை கடன் பெற்று நிறைவேற்றப்பட்டன. இந்தக் கடன் மனப்பான்மையில் இருந்து விடுபட வேண்டும். கடன்பொருளாதாரத்தில் இருந்து விடுபடாவிட்டால் இந்த நாட்டிற்கு எதிர்காலம் இல்லை. எதிர்காலம் ஒன்று இல்லாமல் போகும்.

எனவேகடன்பொருளாதாரத்தில் இருந்து விடுபட்டு நமக்கான வலுவான பொருளாதாரத்தை உருவாக்க பாடுபட வேண்டும்.

இவற்றைஅடைவதற்குஉற்றுமதி வருமானத்தையும், வெளிநாட்டு முதலீடுகளையும் விரைவாக அதிகரிப்பது இன்றியமையாதது. அதற்குத் தேவையான அடித்தளத்தை அமைத்து, பல பொருளாதார சீர்திருத்தங்களை தற்போதுசெயல்படுத்திவருகிறோம். போட்டிப் பொருளாதாரத்தை உருவாக்குவதே எமது பிரதான எதிர்பார்ப்பாகும். அதேபோல் டிஜிட்டல் பொருளாதாரம், பசுமைப் பொருளாதாரத்தையும் உருவாக்க எதிர்பார்க்கிறோம்.ஊழலைஒழித்தல் மற்றும் சமூக நவீன மயமாக்கல் என்பனவே இந்த செயல்முறையின் முக்கிய அம்சங்களாகும்.

இந்த நாட்டில் ஊழல் ஒரு சாபக்கேடாக மாறிவிட்டது என்பதை பலரும் ஒப்புக்கொள்கிறார்கள். ஆனால், முறைமையான சட்ட விதிகளால் மாத்திரமே ஊழலை ஒழிக்க முடியும் என்பதை பலர் உணரவில்லை. திருடர்களைப் பிடியுங்கள் என்று கூச்சல் போடுவதால் மாத்திரம் திருடர்களைப் பிடிக்க முடியாது. திருடர்களைப்பிடிப்பதற்கு, வலுவான சட்ட விதிகள் மற்றும் ஒழுங்கு முறைகள் மற்றும் அறிவியல் முறைகள் தேவை. அவற்றை நடைமுறைப்படுத்தக்கூடிய பயிற்சி பெற்ற அதிகாரிகளும் தேவை.

ஊழல்வாதிகளை நீதியின் முன் நிறுத்தினால் பிரச்சினைக்குத் தீர்வு காண முடியும் என்று பலர் நினைக்கிறார்கள். இது ஒரு மாயை. ஊழலைத் தடுக்கவும் கடுமையான சட்ட விதிமுறைகளை உருவாக்க வேண்டும். மேலும் ஊழல்வாதிகள் கடுமையாக தண்டிக்கப்பட வேண்டும். ஊழலை ஒழிக்க இந்த இரண்டு விடயங்களும் ஒன்றாக செயல்படுத்தப்பட வேண்டும்.

அதற்காக, ஊழல் தடுப்புச் சட்டத்தை நிறைவேற்றினோம். தற்போது சட்டம் அமுலுக்கு வந்துள்ளது. அத்தகையசட்டங்களை நடைமுறைப்படுத்துவதில் நாங்கள் ஒருபோதும் அரசியல் அல்லது பிற அழுத்தங்களைப் பிரயோகிக்க மாட்டோம். அது தற்போது நாட்டின் முன் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

பொருளாதார மற்றும் சமூக நவீனமயமாக்கலில் நாம் கவனம் செலுத்தும் சில முக்கிய விடயங்கள் குறித்தும் இந்த கௌரவ சபைக்கு வலியுறுத்த விரும்புகிறேன்.

சுற்றுலாத்துறையை எம்மால் எளிதாக அபிவிருத்திசெய்ய முடியும். அந்தத்துறையில் முன்னேற்றத்திற்கு தேவையான மனித மற்றும் பௌதீக வளங்களை மேம்படுத்தவும், நாட்டிற்கு வரும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கையை அதிகரிக்கவும் நடவடிக்கை எடுத்து வருகிறோம். இலங்கைக்கு வரும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கையை வருடத்திற்கு 5 மில்லியனாக அதிகரிப்பதே எமது எதிர்பார்ப்பாகும்.

நமது நாடு புதுப்பிக்கத்தக்க வலுசக்தி மூலங்கள் நிறைந்த நாடு. அந்த வாய்ப்பை நாம் சரியாக பயன்படுத்திக்கொள்ள வேண்டும். சர்வதேச தொழில்நுட்பத்தைப் பெற்று, நம் நாட்டில் புதுப்பிக்கத்தக்க வலுசக்தியை உற்பத்தி செய்தால், வலுசக்தி ஏற்றுமதி செய்யும் நாடாக அந்நியச்செலாவணியைப்பெறலாம்.

பசுமை ஹைட்ரஜன் மற்றும் பசுமை அமோனியா உற்பத்தியில் நாம் உயர்ந்த நிலையை அடைய வாய்ப்பு உள்ளது. இந்த வாய்ப்புகளைப் பயன்படுத்திக் கொள்வதற்கான ஆரம்ப கட்டத் திட்டங்கள் ஏற்கனவே உருவாக்கப்பட்டுள்ளன.

காலநிலை மாற்றம் குறித்து நாம் ஏற்கனவே கவனம் செலுத்தி வருகிறோம். இது தொடர்பான ஆய்வுப் பணிகளை மேற்கொள்வதற்காக, இலங்கையில் காலநிலை மாற்றம் தொடர்பான சர்வதேச பல்கலைக்கழகத்தை நிறுவுவதற்கான அடிப்படை நடவடிக்கைகள் ஏற்கனவே மேற்கொள்ளப்பட்டுள்ளன.

கடந்த காலத்தில் இருந்து தற்போதுவரை விவசாயத்தில் ஈடுபட்டு வருகிறோம். பயிரிடுகின்றோம். ஆனால் இன்னும் காலாவதியான முறைகளையே பின்பற்றிவருகிறோம். பலதசாப்தங்களாக எந்த விவசாய நவீனமயமாக்கல் பணிகளையும் நாங்கள் முன்னெடுக்கவில்லை.

அடுத்த மூன்று, நான்கு போகங்களில் உலர் வலயத்தில் விவசாய நிலங்களின் உற்பத்தியை இரண்டு, மூன்று மடங்கினால் உயர்த்தும் திட்டத்தை செயல்படுத்தி வருகிறோம். அதற்கான கொள்கை ரீதியிலான முடிவுகளை நாங்கள் எடுத்துள்ளோம். இம்மாதம் முதல் ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒரு பிரதேச செயலகப் பிரிவு தெரிவு செய்யப்பட்டு இப்பணிகள் ஆரம்பிக்கப்படும். இவ்வாறு, உலர் வலயத்தில் விவசாயப் பயிர்களின் உற்பத்தித்திறனை அதிகரிப்பதற்கும், ஈரவலயப் பகுதியில் உள்ள நிலத்தை ஏனைய வர்த்தகப் பயிர்களுக்குப் பயன்படுத்தவும் வாய்ப்புக் கிடைக்கின்றது.

எழுபதுகளில் காணி சீர்திருத்த ஆணைக்குழுவின்கீழ்கையகப்படுத்

தொடர்ச்சி 12ம் பக்கம்....

காலைக்கதிர் Kalaikkathir

## இலங்கையைக்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தப்பட்டபயனுள்ளபலஇலட்சம்ஏக்கர் நிலங்கள்தற்போதுவீணாகிவிட்டன. சில நிலங்களில் உரிய பயனைப் பெறுவதில்லை. சில நிலங்கள் முற்றாகப்பயன்படுத்தப்படவில்லை. ஜனவசம, பெருந்தோட்டக் கூட்டுத்தாபனம் போன்ற பல்வேறு அரச நிறுவனங்களுக்குச் சொந்தமான இந்தக் காணிகள் வீணாகிவருகின்றன. அது மாத்திரம் அல்ல. இந்த அரசநிறுவனங்களைப் பராமரிக்க பில்லியன் கணக்கான அரச பணம் செலவிடப்படுகிறது. இரு பக்கத்திலும் நாட்டிற்கு இழப்பு. பாரியவீண்விரயம்இடம்பெறுகிறது.

இந்தநிலங்களிலிருந்துஅதிகபட்ச உற்பத்தியைப் பெறுவதற்கு பயனுள்ள வேலைத் திட்டத்தை நாங்கள் தயாரித்துள்ளோம். இந்த நிலங்கள் உள்நாட்டுத் தொழில்முனைவோருக்குஏற்றுமதி வணிக பயிர்ச்செய்கைக்கு நீண்ட கால குத்தகை அடிப்படையில் வழங்கப்படும்.

அவசியம் ஏற்பட்டால், அந்த தொழில்முனைவோர் வெளிநாட்டு தொழில்நுட்பம்மற்றும்முதலீட்டைப் பெற அனுமதியும் வழங்குவோம். முறையாகப் பயன்படுத்தப்படாமல் வீணாகப் போகும் நிலங்களை அந்நியச்செலாவணி ஊற்றுக்களாக மாற்றி பொருளாதார வளர்ச்சிக்கு வலுவாகப் பயன்படுத்துவதே இதன் நோக்கமாகும்.

கடந்த சுதந்திர தினத்திற்கு பிரதம அதிதியாக இங்கு வருகை தந்த தாய்லாந்து பிரதமர், தனது நாட்டில் முன்னெடுத்த விவசாய புரட்சி குறித்த விடயங்களைக் குறிப்பிட்டார். தாய்லாந்து பாரம்பரிய முறைகளில் சிறைப்பட்டிருக்காமல் நவீன தொழில்நுட்பத்தை சரியாகப் பயன்படுத்துவதால் விவசாயத்தின் மூலம் அதிக அளவில் அந்நியச் செலாவணியை ஈட்டுகிறது. அவற்றிலிருந்து நாமும் பாடம் கற்க வேண்டும். வெளிநாட்டு முதலீடுகள் குறித்து நாம் அதிக கவனம் செலுத்துகிறோம். நமது பொருளாதாரத்தை விரைவாக வலுப்படுத்த வெளிநாட்டு முதலீடுகள் ஊடாக பாரிய உந்து சக்தி கிடைக்கிறது. ஆனாலும் வெளிநாட்டு முதலீட்டாளர்கள் இலங்கைக்குவரத்தயங்குகின்றனர்.

இலங்கையில்முதலீடுசெய்வது ஒருதலைவலி. பிரச்சினை. அனுமதி பெறுவதில் பல உத்தியோபூர்வ தடைகள் உள்ளன. அது மட்டும் அல்ல. சில தனிநபர்கள் மற்றும் நிறுவனங்களுக்கு இலஞ்சம் கொடுக்க வேண்டியுள்ளது. அவை அனைத்திற்கும் முற்றுப்புள்ளி வைத்து, தற்போது வெளிநாட்டு முதலீட்டாளர்களை பாரிய அளவில் கவரும் வகையில் வேலைத் திட்டங்களை நாம் தற்போது தயாரித்துள்ளோம். ஒரு எளிய செயல்முறை மூலம் முதலீட்டு வாய்ப்புகளை உருவாக்குவதை இது சாத்தியமாக்குகிறது. இது ஊழலை மோசடிகளைத் தடுக்கிறது.

சீனா, வியாட்நாம் போன்ற நாடுகளில் முதலீடு செய்வதற்கான அனைத்து அனுமதிகளும் வசதிகளும் இரண்டு அல்லது மூன்று நாட்களுக்குள் ஒரே கூரையின் கீழ் செய்யப்பட்டுள்ளன. நிலம் மட்டுமின்றி, மின்சாரம், நீர் வசதிகள், வீதிக் கட்டமைப்பும் மிக விரைவாக செய்து தரப்படுகிறது. பெரும்பாலான பணிகள் கணினி மூலம் செய்யப்படுவதால், சட்ட விரோத செயல்களுக்கு வாய்ப்பில்லை. இந்த அனைத்து விடயங்கள் மற்றும் சர்வதேச தரங்களின் அடிப்படையில், தற்போதைய தேவைகளுக்கு ஏற்ற வகையில் பொருளாதார ஆணைக்குழுவை அமைப்பதற்கான அடிப்படை பணிகள் தற்போது பூர்த்தி செய்யப்பட்டுள்ளன. பரந்த அளவில் நடைமுறைப்படுத்தப்படும் பலவிதமான முதலீட்டு சட்டங் கள் மற்றும் திட்டங்கள் இந்த ஆணைக் குழு மூலம் செயல்படுத்தப்படும்.

அதேபோல் கல்வி, சுகாதாரம் போன்ற துறைகள் தொடர்பிலும் அவதானம் செலுத்த வேண்டும். இரண்டாம் உலகப் போர் காலத்திலேயே இலங்கையின் கல்வி மற்றும் சுகாதாரத் துறைகளின் அடிப்படை சட்டங்கள் உருவாக்கப்பட்டன. அக்காலத்தில் நாம் காலணித்துவ நாடாக இருந்தோம். அப்போது நாம் மிகவும் வறுமையான நாடாக இருந்தோம். எனவே, அத்தகைய சமூகத்திற்காக வடிவமைக்கப்பட்ட கல்வி மற்றும் சுகாதார நடைமுறைகளின் அடிப்படையில் நவீன உலகத்தை அணுகுவது சாத்தியமற்றது. இவற்றின் மூலம் 21ஆம் நூற்றாண்டின் சவால்களை சமாளிக்கவும் முடியாது.

அதனால் சர்வதேச அனுபவம், நடைமுறைகளின் அடிப்படையில், இரண்டு துறைகளுக்குமான புதிய அணுகுமுறைகள் மற்றும் புதிய சட்டத்திட்டங்கள் அறிமுகப்படுத்தப்பட வேண்டும். புதிய சூழலுக்கு ஏற்ற வகையில் மனித வளம் மேம்படுத்தப்படவேண்டும். வறிய மற்றும் பாதிக்கப்படக்கூடிய பிரிவினரின் பாதுகாப்பிற்காக துரித நவீனமயமாகக்கல் வேலைத் திட்டத்தை முன்னெடுக்க வேண்டும். விசேடமாக கல்வி மறுசீரமைப்புக்களை உடனடியாக நடைமுறைப்படுத்த வேண்டும்.

உலகின்எதிர்காலம்புதியதொழில் நுட்ப அறிவின் மீதே தங்கியுள்ளது. தகவல் தொழில்நுட்பம், செயற்கை நுண்ணறிவு ஆகிய துறைகளில் திறன்மிக்கஇளையதலைமுறையை உருவாக்க வேண்டும். அதற்காகவே உயர்தரத்தில் சித்திபெறும் மாணவருக்குச் செயற்கைநுண்ணறிவுக்கல்வியை வழங்குவதற்கான கொள்கையைத் தயாரித்து வருகிறோம். அதற்கான பலஅறிவியல்மற்றும்தொழில்நுட்பப் பல்கலைக் கழகங்களை நிறுவும் பணியை மேற்கொண்டு வருகிறோம். சாதாரண தரம், உயர்தரத்தில் சித்தி பெறாத அனைத்து மாணவர்களுக்கும் தொழிற்கல்லூரிகளை உருவாக்குவோம்.

புதிய அறிவு மற்றும் புதிய தொழில்நுட்பத் தெரிவுடன் கூடிய புதிய சந்ததியை உருவாக்குவதற்கு அவசியமான பின்னணியை நாம் ஏற்படுத்துவோம்.

அதேபோல் எமது நாடு ஒரு தீவாகும். அதற்கு உகந்த வகையிலான பாதுகாப்பை உறுதி செய்யும் வேலைத் திட்டத்தை நடைமுறைப்படுத்த வேண்டும். நாட்டில் உள்ள அனைத்து பாதுகாப்பு வலையமைப்புக்களும் அதற்கேற்ப நவீனமயப்படுத்தப்பட்டுவருகின்றன. புலனாய்வு அமைப்புகள், பாதுகாப்பு உபகரணங்கள், பயிற்சி முறைகள், படையினர், இராணுவ உபகரணங்கள், மூலோபாய நடவடிக்கைகள் உள்ளிட்ட அனைத்துத் துறைகளையும், நாட்டில் ஏற்படக்கூடிய பல்வேறு சவால்களை எதிர்கொள்ளும் வகையில் தயார்படுத்தி வருகிறோம்.

நமது வெளிநாட்டு உறவுகளை மறுபரிசீலனை செய்ய வேண்டியது காலத்தின் தேவையாகும். அதே போல் பூகோள அரசியல் நகர்வுகளின் மாற்றங்களுக்கு ஏற்ப பொருளாதார வாய்ப்புக்களைப் பெறும் வகையில், உரிய பலன்களைப் பெறும் வகையில் மறுசீரமைக்கவேண்டும். எனவே, அனைத்து நாடுகளுடனும் அணிசேராக் கொள்கையுடனும் நட்புறவு அடிப்படையிலும் வெளிநாட்டு உறவுகளைத் பின்பற்ற வேண்டியது அவசியமாகும். அதற்கேற்ப நமது வெளியுறவுக் கொள்கைகள் காலோசிதமானதாக மாற்ற வேண்டும்.

அதேபோல், பொருளாதார வாய்ப்புக்களை உருவாக்கிகொள்ள புதிய முறையிலான வெளிநாட்டுக் கொள்கைகளைப் பின்பற்ற வேண்டும். இதற்கமைய எமது வெளியுறவுக் கொள்கைகளை காலத்திற்கேற்ற வகையில் மறுசீரமைத்துக் கொள்வோம்.

நமது தயாரிப்புகள் வெளிநாட்டு சந்தைகளைச் சென்றடைவதற்கு அவசியமான அனுமதியைபெற்றுத் தரக்கூடிய வகையில் பொருளாதார உறவுகளை கட்டமைப்போம். அதற்காக பல நாடுகளுடன் சுதந்திர வர்த்தக ஒப்பந்தங்களைக் கைசாத்திட ஆரம்பித்துள்ளோம். இதற்கமைய அண்மையில் தாய்லாந்துடன் சுதந்திர வர்த்தக ஒப்பந்தத்தை செய்துகொண்டோம். இந்தியாவுடன்கைச்சாத்திடப்பட்டுள்ள சுதந்திர வர்த்தக ஒப்பந்தம், முழுமையான பொருளாதார மற்றும் தொழில்நுட்ப ஒத்துழைப்பு ஒப்பந்தமாக விரிவுபடுத்தப்படும். சிங்கப்பூருடனான சுதந்திர வர்த்தக ஒப்பந்தம் முழுமையாக நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. எதிர்காலத்தில் சீனா, இந்தோனேசியா, பங்களாதேஷ் ஆகிய நாடுகளுடனும் சுதந்திர வர்த்தகஒப்பந்தங்களைக்கைசாத்திட எதிர்பார்த்துள்ளோம்.

அதேபோல் வலயத்தின் பரந்துபட்ட பொருளாதார கூட்டமைப்பிலும் இணையவுள்ளோம். அதேபோல் ஐரோப்பிய சங்கத்தின் வர்த்தகத்துக்கான பொது முறைகளுடன்தொடர்புகளைஏற்படுத்துவோம்.

இவ்வாறு பல்வேறு துறைகளை நவீனப்படுத்துவதன் பலனாக நாட்டு மக்களின் வாழ்க்கைத் தரம் மேம்படும். நாட்டின் அனைத்துப் தரப்பினருக்கும்பலன்கள்கிடைக்கும் வகையில் வெற்றிகரமான திட்டத்தைச் செயல்படுத்தும் அதேநேரம் நல்லிணக்கமும் சமூக நீதியும் உறுதிப்படுத்தப்படும்.

நாங்கள் மற்றொரு விடயம் குறித்து கவனம் செலுத்துகிறோம். இன்று எமது பொருளாதாரம் கொழும்பு நகரையும் மேல் மாகாணத்தையும் மையமாகக் கொண்டுள்ளது. நாட்டின் 46 வீதமான பொருளாதாரம் மேல் மாகாணத்திலிருந்தே முன்னெடுக்கப்படுகிறது. இந்நிலை மாற வேண்டும். மேல் மாகாணத்திற்கு வெளியே பொருளாதாரம் விரிவுபடுத்தப்பட வேண்டும். யாழ்ப்பாணம், திருகோணமலை, பிங்கிரிய, ஹம்பாந்தோட்டை, கண்டி உள்ளிட்ட நகரங்களிலும் எமது பொருளாதாரத்தை விரிவுபடுத்துவதற்கான வேலைத் திட்டத்தை நாங்கள் நடைமுறைப்படுத்துகிறோம். தற்போதும் இந்தியாவுடன் இணைந்து திருகோணமலையை பொருளாதாரமையமாக அபிவிருத்தி செய்யும் வேலைத்திட்டத்தை ஆரம்பித்துள்ளோம்.

மேலும், ஒன்பது மாகாணங்களினதும் பொருளாதாரத்தைப் பலப்படுத்த அவசியமான நடவடிக்கைகள் எடுக்கப்படும். அரசமைப்பில் மாகாண சபை அதிகாரங்களின் மூன்றாவது அத்தியாயத்தில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு மாகாண சபைகளுக்கு சில அதிகாரங்களை உரிய வகையில் வழங்குவோம். தொழிற்கல்வி, விவசாயம் போன்ற துறைகளை உதாரணமாகக் கூறலாம். அதன் மூலம் ஒவ்வொரு மாகாணத்திலும் பொருளாதார வளர்ச்சியை துரிதப்படுத்த முடியும். மாகாணங்களுக்கு இடையில் பொருளாதாரப்போட்டித்தன்மையை உருவாக்குவதன் மூலம், ஒன்பது மாகாணங்களும் ஒரே நேரத்தில் அபிவிருத்தியடைவதற்கானவாய்ப்பு உருவாகும்.

எமது நாட்டின் புவியியல் அமைவிடத்தை மையப்படுத்தி உயரிய பலனை அடைந்துகொள்ள எதிர்பார்க்கிறோம். அதற்காக மூன்று துறைமுகங்களில் புதுவிதமான அபிவிருத்தியை ஏற்படுத்த முயற்சிக்கிறோம். அதனால் இந்து சமுத்திரத்தின் சேவை மத்தியஸ்தானமாகவும் பொருளாதார மத்திய நிலையமாக மாற்றுவதற்கும் எதிர்பார்க்கிறோம்.

அதற்கு புத்துயிர் அளிக்கும் வகையில் கொழும்பு துறைமுக நகரத்தை விசேட நிதி வலயமாக பிரகடனப்படுத்துவோம். அதற்குள் வெளிநாட்டு நிதி செயற்பாடுகளை முன்னெடுப்பதற்கு அவசியமான சட்டத்திட்டங்களை உருவாக்குவோம்.

எமது நாட்டின் தேசிய வளம் எமது இளம் சமூகத்தினர் என்பதை அடிக்கடி நினைவுகூறுகிறேன். அந்த வளத்தைப் பாதுகப்பது எமது ஒருமித்த நோக்கமாகும். இளம் சமூகத்தின் பாதுகாப்பு நாட்டின் பாதுகாப்பிற்கு நிகரானதாகும். கடந்த காலங்களில் இளம் சமூனத்தினர் நாட்டை விட்டுச் சென்றனர். அந்த நிலை தற்போதும் உள்ளது. அதனால் எமது இளம் சமூகத்தினருக்கு சுபீட்சமான எதிர்காலத்தை உருவாக்க வேண்டும். அதனை செய்ய வேண்டிய பொறுப்பு நம் அனைவரையும் சார்ந்துள்ளது.

இந்தபொருளாதாரநெருக்கடிக்கு அரசியல் தீர்வுகள் இல்லை. பொருளாதார ரீதியான தீர்வே உள்ளது. அறிவியல் தீர்வை தேட வேண்டும். அதனைவிடுத்து சில அரசியல்குழுக்கள்பழையஅரசியல் தீர்வுகளை கூறி பிரசித்தமடைய முயற்சிப்பது கவலைக்குரியதாகும்.

இவ்விடத்திலிருந்து முன்னேறிச் செல்வதற்கு புதிய வலுவான பொருளாதாரத்திற்கு நாம் மாற வேண்டும். அதற்கான பொருளாதார மாற்றச் சட்டம் விரைவில் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும். அதற்குரிய புதிய நிறுவனத்தையும் உருவாக்க வேண்டும்.

அரசியல் அபிலாஷைகளை மனத்தில் வைத்துக்கொண்டு, தேர்தலில் பெறும் வாக்குகளை இலக்காகக் கொண்டு, நிறைவேற்ற முடியாத வாக்குறுதிகளை வழங்கி அல்லது வீண்கதை பேசி எம்மால் முன்நோக்கிச் செல்ல முடியாது. மாறாக எதிர்காலச் சந்ததியின் வாழ்க்கைத் தரத்தை முன்னேற்றுவதற்கான வேலைத் திட்டத்தை தொடர்ச்சியாக முன்னெடுத்துச் செல்ல வேண்டும்.

இந்த மாற்றத்தைக் குறுகிய காலத்தில் செய்துவிட முடியாது. அதற்காக நீண்ட கால முயற்சியும் அர்ப்பணிப்பும் அவசியப்படும். அதே பாதையில் தொடர்ந்து சென்றால் 2048 ஆம் ஆண்டுக்குள் வளர்ச்சியடைந்த நாடாக மாறலாம். எந்த நெருக்கடிக்கும் குறுகிய கால தீர்வுகள் இல்லை. இரண்டு நாட்களில் எந்த இலக்கையும் அடைய முடியாது.

புத்த பெருமான் ஞானம் பெறுவதற்காக மிக நீண்டகாலம் ஆனது. ஞானம் பெற்ற பின்னரும் அவர் பல்வேறு கஷ்டங்களை எதிர்கொள்ள நேரிட்டது. அதனைப் புரிந்துகொண்டு நாம் நிதானமாகவும் திட்டமிடலுடனும் முன்னேறிச் செல்ல வேண்டும்.

ஆரம்பத்தில் புத்தரின் பிரசங்கம் ஒன்றைக் கூறினேன். புத்தரின் பிரசங்கத்திற்குப் பல ஆண்டுகளுக்குப் பிறகு, கிறிஸ்துவுக்கு முந்தைய ஐநூறாம் ஆண்டுகளில் சீனாவில் வாழ்ந்த தத்துவஞானி கன்பூசியஸ் என்பவர்' உலகைக் கட்டியெழுப்ப முதலில் தேசத்தைக்கட்டியெழுப்பவேண்டும். தேசத்தை கட்டியெழுப்புவதற்கு முன் குடும்பத்தைக் கட்டியெழுப்ப வேண்டும். குடும்பத்தைக் கட்டியெழுப்பும் முன்னதாக எமது தனிப்பட்ட வாழ்வாதாரத்தைக் கட்டியெழுப்பவேண்டும். தனிப்பட்ட வாழ்க்கையைக்கட்டியெழுப்புவதற்கு முன்னதாக எமது மனதைத் தயார்படுத்திக்கொள்ள வேண்டும்.' என்று கூறியுள்ளார்.

எனவே, இந்த சபையில் உள்ள அனைவரும் முதலில் மனதைத் தயார்படுத்திக் கொள்ள வேண்டும் எனக் கேட்டுக்கொள்கிறேன். எதிர்காலத்தில் இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பை உருவாக்க, அவர்களுக்கான சிறந்த நாட்டைக் கட்டியெழுப்ப, நாம் அனைவரும் சரியான பாதையில் செல்ல வேண்டும். அதற்காக நம் மனதைத் தயார்படுத்திக்கொள்ள வேண்டும்.

நாம் அனைவரும் ஒன்றிணைந்து இந்த சவாலை ஒற்றுமையுடன் எதிர்கொண்டால் மட்டுமே நமது பயணத்தைத் துரிதப்படுத்த முடியும். தமக்குக் கிடைக்கும் அந்தஸ்த்துகள் பற்றி கனவு காணும் சிலர், அந்த நாட்டை விடவும் பதவிகளை அதிகமாக நேசிக்கின்றனர். அந்த பதவிகளுக்காக நாட்டுக்குப் பொய்யான வாக்குறுதிகளை வழங்குகின்றனர். நாட்டையும் மக்களையும் ஏமாற்றுகின்றனர். நடைமுறையை உணராமல் கனவுப் பாதையில் செல்லமுற்படும் பட்சத்தில் அனர்த்தங்களை எதிர்கொள்ள நேரிடும்.

நாட்டைக் கட்டியெழுப்பும் கனவை நனவாக்க அனைவரும் ஒன்றிணைய வேண்டுமென மீண்டும் கேட்டுக் கொள்கின்றேன். அதற்காக ஒற்றுமையாக கலந்துரையாடுவோம். நாங்கள் செயல்படுத்தும் முறையை விட சிறந்த மாற்று முறைகள் இருந்தால், அவற்றைக் கூறுங்கள். அவற்றை ஆழமாகப் ஆராய்வோம். அது குறித்தும் கலந்துரையாடுவோம். அவற்றில் நாட்டுக்குச் சிறந்தென கருதப்படும் யோசனையைச் செயற்படுத்துவோம். அவ்வாறான பேச்சுக்களில் கலந்துகொள்ள நாம் தயாராகவே இருக்கிறோம். அவ்வாறான பேச்சுக்களுக்குக்கு தயார் எனில், அந்தக் கலந்துரையாடல்களுக்கு சர்வதேச நாணய நிதியம், உலக வங்கி ஆகியவற்றின் பிரதானிகளையும் அழைப்பிக்க முடியும்.

கிழக்கு மற்றும் மேற்கு பகுதிகள் தொடர்பில் இரு உதாரணங்களைக் கூற விரும்புகிறேன். 19 ஆம் நூற்றாண்டில் அமெரிக்காவின் எழுத்தாளரும் பேச்சாளருமான எலன் கெல்லர் 'தனியாக நாம் சில விடயங்களை மட்டுமே செய்ய முடியும். ஒன்று பட்டால் பல விடயங்களை செய்யலாம்.'

19 ஆம் நூற்றாண்டில் மகாகவி பாரதியார் தனது நாடு பற்றி எழுதிய கவிதையொன்று நினைவிற்கு வருகிறது. அதனை சிங்களத்தில் மொழி பெயர்த்தவர் பேராசிரியர் சுனில் ஆரியரத்ன

'முப்பது கோடி முகமுடையாள்
உயிர்மொய்ம்புறஒன்றுடையாள்
இவள் செப்பு மொழிபதினெட்டுடையாள்
எனில்சிந்தனைஒன்றுடையாள்'

அவ்வாறான எண்ணம் எமக்கு ஏன் வரவில்லை? பல்வேறு எண்ணங்கள்இருந்தாலும்பல்வேறு இனங்களைச் சார்ந்தவர்களாக இருந்தாலும், பல்வேறு பகுதிகளில் வாழ்ந்தாலும், பல்வேறு பிரச்சினைகள், நம்பிக்கைகள் இருந்தாலும், பல்வேறு அரசியல் கட்சிகளுக்குஆதரவாகஇருந்தாலும், எமது நாட்டிற்காகவும் அதன் எதிர்காலத்திற்காகவும் ஒருமித்த எண்ணத்துடன்ஒன்றுபடமுடியாமல் இருப்பது ஏன்? எமது நாட்டு இளைய சமூகத்தின் எதிர்காலத்திற்காக ஒன்றுபட முடியாதிருப்பது ஏன்? மீண்டும் - மீண்டும் உங்களுக்கு அழைப்பு விடுக்கிறேன். பொது நோக்கத்துடன் ஒன்றுபடுங்கள். மாற்றத்தை நம்மிலிருந்து ஆரம்பிப்போம். எமக்கு நாமே ஒளியாவோம்.

இந்தச் சபையைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அரசியல் கட்சிகளில் பல தசாப்தங்களாக என்னை விமர்ச்சித்தவர்களே ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவில் உள்ளனர். நாட்டின் நன்மைக்காகவும், இளையோரின் எதிர்காலத்திற்காகவும் பொது ஜன பெரமுனவின் பெரும்பாளானவர்கள் பழைய பகையை மறந்துவிட்டு ஒன்றுபட்டுள்ளனர்.

ஐக்கிய மக்கள் சக்தியில் இருப்பவர்கள் என்னுடன் பல காலமாக அரசியலில் ஈடுபட்டவர்கள். நான் அரசியலுக்கு அறிமுகப்படுத்தியவர்களும் உள்ளனர். நாட்டுக்கான பொது பயணத்தில் இணைந்துகொள்ள பொது ஜன பெரமுனவால் முடியுமாயின் ஐக்கிய மக்கள் சக்தியால் அதனை செய்ய முடியாதிருப்பது ஏன்?

மக்கள் விடுதலை முன்னணி நல்லாட்சிஅரசின்காலத்தில்எம்முடன் நெருக்கமாக செயற்பட்டது. ஊழல் ஒழிப்பு பிரிவின் அலுவலகத்திற்கு ஆனந்த விஜயபாலவின் பெயர் பரிந்துரை செய்யப்பட்டது. அவ்வாறிருக்க நாட்டின் பொது முன்னேற்றத்திற்கான பயணத்தில் இணைய முடியாதிருப்பது ஏன்?

இந்தச் சபையில் உள்ள தமிழ், முஸ்லிம் கட்சிகள் என்னுடன் இணைந்து பணியாற்றியுள்ளன. எனினும், நாட்டிற்காக இந்தக் கட்சிகளுக்கு பொதுப் பயணத்தில் ஏன் இணைந்துகொள்ள முடியாது.

நாம் தேர்தலில் வெள;வேறாக போட்டியிடுவோம். ஆனால் நாட்டின் முன்னேற்றத்திற்கான முயற்சிகளில் இணைந்துகொள்வோம்.

அதனால் நாட்டை முன்னேற்ற பொது நிலைப்பாட்டுடன் பொதுவான எண்ணத்துடன் ஒன்றுபட முன்வாருங்கள் என மீண்டும் அழைப்பு விடுக்கிறேன். மாற்றத்தை எம்மிலிருந்து ஆரம்பிப்போம். எமது மனங்களைத்திருத்திக்கொள்வோம். எமக்கு நாமே ஒளியாவோம். நாம் புதிய அரசியல் கலாசாரத்தை உருவாக்குவோம். தனிப்பட்ட நோக்கங்களுக்காக அன்றி நாட்டின் பொதுக் கனவை நனவாக்க ஒன்றுபடுவோம்.

அடுத்த சந்ததியின் முன்னேற்றத்திற்காக ஒன்றுபடுவோம். எம்மீது சாட்டப்பட்டிருக்கும் பொறுப்புக்களை நாம் நிறைவேற்றுவோம். பல்வேறு தனிப்பட்ட நோக்கங்களுக்காக, இந்த பொறுப்புக்களைப் புறக்கணித்தால் வரலாற்றில் நாம் துரோகிகளாக அடையாளப்படுத்தப்படுவோம். அதனால் புதிய பயணத்தைத் தொடர்வோம். புதிய எதிர்காலத்தை, புதிய நாட்டை உருவாக்குவோம். வாருங்கள் ஒன்றுபட்டு நாம் புதிய நாட்டைக் கட்டியெழுப்புவோம் - என்றார்.

காலைக்கதிர் Kalaikkathir

# வெள்ளத்தில் குளக்கட்டு உடைவு மாவட்டச் செயலர் நேரில் பார்வை





(வி.ரி.சகாதேவராஜா)

அண்மையில் அம்பாறை மாவட்டத்தில் ஏற்பட்ட பெருவெள்ளத்தால் பாரிய உடைப்பெடுத்த குளக்கட்டை அம்பாறை மாவட்ட அரச அதிபர் சிந்தக அபேவிக்கிரம நேரடியாக சென்று பார்வையிட்டார்.

அண்மையில் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கால் திருக்கோவில் பிரதேசத்தில் உள்ள பாலக்கரச்சி தாமரைகேணி குளக்கட்டில் பாரிய உடைவு ஏற்பட்டிருந்தது. பாலக்கரைச்சி தாமரைகேணி விவசாய அமைப்பு திருக்கோவில் பிரதேச செயலாளர் தங்கையா கஜேந்திரனிடம் விடுத்த வேண்டுகோளை ஏற்று அவர் திங்கட்கிழமை விஜயம் செய்தார்.

இதன் போது விவசாயிகளால் குளத்தினை புனர்நிர்மாணம் செய்யக்கோரி மகஜர் ஒன்றும் மாவட்ட செயலாளரிடம் கையளிக்கப்பட்டது. (05)



# சேவைநலன் பாராட்டு விழா கல்முனையில்

(எம்.எஸ்.எம்.ஸாகிர்)

கல்முனை இஸ்லாமாபாத் முஸ்லிம் மகா வித்தியாலயத்தில் சுமார் 15 வருடங்களாகச் சேவையாற்றி 2024.01.26ஆம் திகதி ஓய்வு பெற்ற திருமதி எஸ். ஜே.ஏ.கபூர் பிரதி அதிபருக்கான சேவை நலன் பாராட்டு விழா திங்கட்கிழமை பாடசாலை நலன்புரிக் குழுவின் ஏற்பாட்டில் நடைபெற்றது.

இந்த நிகழ்விற்கு கௌரவ அதிதியாக கல்முனை வலயக் கல்விப் பணிப்பாளர் எம்.எஸ்.சஹுதுல் நஜீம், விசேட அதிதியாக முன்னாள் பிரதிக் கல்விப் பணிப்பாளரும், இஸ்லாமாபாத் முஸ்லிம் மகாவித்தியாலயத்தின் அதிபருமான ஓய்வு பெற்ற ஏ.சி.எம். தௌபீக் ஆகியோர் கலந்து கொண்டனர்.

பாடசாலையின் அதிபர் ஏ.ஜி.எம். நிசாத்தின் வழிகாட்டலிலும் பாடசாலை நலன்புரிச் சங்கத் தலைவர் எம். ரீ.ஏ.முனாப்பின் தலைமையிலும் நடைபெற்ற இந் நிகழ்வில், பிரதம அதிதியாக கலந்து கொண்ட திருமதி எஸ். ஜே.ஏ.கபூர் பிரதி அதிபரின் சேவைகளைப் பாராட்டி அதிபர், அதிதிகள் மற்றும் ஆசிரியர்கள் என பலரும் பேசியதுடன் பொன்னாடை போர்த்தி வாழ்த்துப் பாவுடன் பொற்கிழியும் வழங்கிக் கௌரவிக்கப்பட்டார். (05)

# செட்டிகுளத்தில் பல வருடங்களாக வாழ்வாதாரம் குடிநீருக்காக போராடிய குடும்பத்துக்கு நீர் வசதி



வவுனியா, செட்டிகுளம் பகுதியில் உள்ள குடும்பம் ஒன்றின் நீண்டகாலப் பிரச்சனையான வாழ்வாதாரம் மற்றும் குடி நீர் என்பவற்றுக்கு தீர்வு காணும் முகமாக குடி நீர் திட்டம் ஒன்று புதன்கிழமை ஆரம்பித்து வைக்கப்பட்டது.

வவுனியா, செட்டிகுளம் பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட முகத்தான்குளம் கிராம அலுவலர் ஊடகவியலாளரிடம் விடுத்த கோரிக்கைக்கு அமைவாகப் புலம்பெயர்ந்து பிரான்சில் வசிக்கும் சமூக செயற்பாட்டாளரான கந்தையா ஸ்ரீமுருகதாஸ் என்பவரின் நிதி உதவியில் ஊடக உறவுகளின் பாலம் அமைப்பின் ஊடாக குறித்த குடிநீர் திட்டம் வழங்கிவைக்கப்பட்டது.

செட்டிகுளம், முகத்தான்குளம், இரண்டாம் பண்ணையில் மூன்று பிள்ளைகளுடன் வசிக்கும் விசேட தேவைக்குட்பட்ட குடும்பம் ஒன்று நீண்ட நாட்களாக குடிநீர் பெறுவதில் இடர்பாடுகளை எதிர் நோக்கியிருந்ததுடன், வீட்டுடன் கூடிய வீட்டுத் தோட்டத்திற்கான காணிகள் இருந்தும் நீர் இல்லாமையால் வீட்டுத் தோட்டம் செய்ய முடியாது, பெண் நாளாந்தம் கூலி வேலைக்கு சென்று தனது மூன்று பிள்ளைகளையும், விசேட தேவைக்குட்பட்ட கணவனையும் கவனித்து தமது ஜீவனோபாயத்தை கொண்டு நடத்தி வந்தார்.

இக் குடும்பத்தின் நீர்ப் பிரச்சினைக் குத் தீர்வு காணும் முகமாக மோட்டருடன் கூடிய குழாய் கிணறு மற்றும் நீர் தொட்டி என்பன அமைத்து கொடுக்கப்பட்டன.

இதன்போது, அதிதிகள் குடிநீர் திட்டத்தை திறந்து வைத்ததுடன், பெயர் பலகையையும் திரை நீக்கம் செய்து வைத்தனர். அத்துடன் குறித்த குடும்பத்தின் பிள்ளைகளுக்கு கற்றல் உபகரணங்கள் அதிதிகளால் வழங்கி வைக்கப்பட்டதுடன், குறித்த நிகழ்வின் நினைவாக குறித்த காணியில் பயன்தரும் மரநடுகையும் இடம்பெற்றது.

செட்டிகுளம் முகத்தான்குளம் கிராம அலுவலர் எஸ்ரஞ்சினிதலைமையில் நடைபெற்ற இந் நிகழ்வில் செட்டிகுளம் பிரதேச செயலாளர் இ.பிரதாபன், செட்டிகுளம் பிரதேச செயலக இந்து கலாசார உத்தியோகத்தர் சிவ.கஜன், ஊடகவியலாளர்களான ந.கபில்நாத், கி.வசந்தரூபன், திருமதி சி.திவியா, வ.பிரதீபன், சமூக செயற்பாட்டாளர் திருமதி ஹெலன் மேரி மற்றும் அப்பகுதி மக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (05-100)

# தேசிய உணவு பாதுகாப்பு திட்டத்தின்கீழ் பால் மா பக்கெட்டுக்கள் வழங்கி வைப்பு

(ஹஸ்பர் ஏ.எச்)

ஜனாதிபதி செயலகம் ஊடாக நடைமுறைப்படுத்தப்படும் தேசிய உணவு பாதுகாப்பு திட்டத்தின் கீழ் தம்பலகாமம் பிரதேச செயலகப் பிரிவில் தெரிவுசெய்யப்பட்ட பயனாளிகளுக்கான பால் மா பக்கெட்டுக்கள் வழங்கி வைக்கப்பட்டன.

தம்பலகாமம் பிரதேசசெயலாளர் ஜெ.ஸ்ரீபதியின் வழிகாட்டுதலுக்கிணங்க பிரதேச செயலக மண்டபத்தில் இடம்பெற்ற குறித்த பால் மா பக்கெட்டுக்களை பொன்டெறா நிறுவனத்தின் அனுசரணையில் வழங்கி வைக்கப்பட்டன. தம்பலகாமம் பிரதேச செயலகத்திற்குட்பட்ட 12 கிராம சேவகர் பிரிவிலும் தெரிவுசெய்யப்பட்ட 90 குடும்பங்களுக்கு ஒருவருக்கு தலா 02 பக்கெட்டுக்கள் வீதம் மொத்தமாக 180 பக்கெட்டுக்கள் வழங்கி வைக்கப்பட்டன.

மந்தபோசனையுடைய பிள்ளைகளின் போசாக்கை அதிகரிக்கும் நோக்கில் இது வழங்கி வைக்கப்பட்டன.

இதில் பிரதேச செயலக பிரதி திட்டமிடல் பணிப்பாளர் ஐ.முஜீப்,தம்பலகாமம் இராணுவ முகாம் மேஜர் டபிள்யூ.எம்.சீ. வன்னிநாயக்க, நிர்வாக உத்தியோகத்தர் உட்கெதர உட்பட பலர் கலந்து கொண்டனர். (05)

# ஊடகவியலாளருக்கு மற்றுமொரு விருது

(எச்.எம் சியாஜ்)

புத்தளம் ஆயுர்வேத வைத்தியசாலைக்கு நிதி திரட்டும் முகமாக சிநேக பூர்வ உதைபந்தாட்ட போட்டி ஒன்று புத்தளம் கடற்படை அணிக்கும் ஏறாவூர் வை.எஸ்.எஸ் அணிக்கும் இடையில் புத்தளம் மாவட்ட விளையாட்டு அரங்கில் வெள்ளிக்கிழமை நடைபெற்றது. இதன்போது புத்தளத்தில் கடந்த 43 வருடங்களாக ஊடகத்துறையில் பணியாற்றி வரும் எம்.யூ.எம் சனூன் புத்தளம் லெஜன்ஸ் கழகத்தால் மற்றும் ஒரு விருது வழங்கி கௌரவிக்கப்பட்டுள்ளார். (05)

# பாலர் பாடசாலை விடுகை விழா

மன்னார், முசலி, வேப்பங்குளம் லிட்டில் ரோஸ் பாடசாலையின் விடுகைவிழா திங்கட்கிழமை பாடசாலை வளாகத்தில இடம்பெற்றது.

முசலி பிரதேச சபையின் முன்னாள் உப தவிசாளர் எஸ்.எம்.எம்.பைறுஸ் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில், அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ரிஷாத் பதியுதீன் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு, மாணவர்களுக்கான பாடசாலை உபகரணங்களையும் வழங்கி வைத்தார்.

இந்த நிகழ்வில் முசலி கோட்ட உதவிக்கல்விப் பணிப்பாளர் உவைஸ், மன்னார் பிரதேச சபையின் முன்னாள் தவிசாளர் முஜாஹிர், மன்னார் மாவட்ட மரண விசாரனை அதிகாரி நசீர், பாலர் பாடசாலைகளுக்கான இணைப்பாளர் அமீருன் நிஸா மற்றும் கட்சியின் முக்கியஸ்தர்கள், பள்ளி பரிபாலன சபைத் தலைவர்கள், நிர்வாகிகள் உட்பட ஊர்ப்பிரமுகர்களும் கலந்துகொண்டனர். (05)

காலைக்கதிர் Kalaikkathir

# வீதிகளில் நெல் உலர விடுவதால் வாகன போக்குவரத்துப் பாதிப்பு





பெரும்போக அறுவடை நடைபெற்று வரும் நிலையில் தற்பொழுது மழையும் ஓய்ந்துள்ள நிலையில் அறுவடை செய்த நெற்களில் கிளிநொச்சி மாவட்டத்தின் பல பகுதிகளிலும் விவசாயிகள் நெல்லினை வீதிகளலே உலர விடுவதை வாடிக்கையாகக் கொண்டுள்ளனர்.

இரவு பகல் பாராமல் தொடர்ச்சியாக வீதியோரங்களிலேயே தமது நெல்களை உலர விடுவதன் காரணமாக வீதிகளால் செல்லும் வாகன சாரதிகள் பெரிதும் சிரமப்படுகின்றனர் எனவும் இதன் காரணமாகக் கடந்த காலங்களில் வீதிகளில் நெல் உலர விடுவதன் காரணமாக மூன்று பேர்கள் உயிரிழந்தனர் அத்துடன் செவ்வாய்க்கிழமை இரவும் கிளிநொச்சி நோக்கி பயனித்த உழவு இயந்திரமும் பரந்தன் பகுதியிலிருந்து பயனித்த மோட்டார்சைக்கிளும் மோதியதில் மோட்டார்சைக்கிளில் பயனித்தவர் படுகாயமடைந்து கிளிநொச்சி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

எனவே இது தொடர்பாக சம்பந்தப்பட்ட அதிகாரிகள் தற்பொழுது வீதிகளில் நெல்லை உலர விட வேண்டிய தேவை என்னவென்று புரியாத நிலையில் உள்ளனர் எனவும் தற்பொழுது மழையும் ஓய்ந்து உள்ளது இதனை விவசாயிகள் கருத்தில் கொள்ளாமல் தொடர்ச்சியாக வீதிகளில் நெல்லை உலர விடுவதை வாடிக்கையாக கொண்டுள்ளனர் இதை தொடர்பாக சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என வாகன சாரதிகள் தெரிவித்துள்ளனர். (05-113)

## பொதுப் போக்குவரத்து வாகனங்களில் பாலியல் சீண்டல் செய்வோர் கைதாவர்

### பிரதி பொலிஸ் மா அதிபர் ரேணுகா ஜயசுந்தர எச்சரிக்கை

பொதுப் போக்குவரத்து சேவைகளை பயன்படுத்தும் போது பெண்களுக்கு எதிரான பாலியல் துன்புறுத்தல் மற்றும் பாலியல் வன்முறைகளில் ஈடுபடும் நபர்களை கைது செய்வதற்கான விசேட நடவடிக்கை புதன்கிழமை முதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக சிறுவர் மற்றும் மகளிர் பணியகத்திற்கு பொறுப்பான பிரதி பொலிஸ் மா ரேணுகா ஜயசுந்தர தெரிவித்துள்ளார்.இதற் காக பெண் பொலிஸார் மற்றும் சிவில் உடையில் இரகசிய கேமரா பொருத்தப்பட்ட பொலிஸார் அடங்கிய 234 குழுக்கள் நியமிக்கப்பட்டுள்ளன.

பொதுப் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ் மற்றும் பதில் பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னகோன் ஆகியோரின் ஆலோசனைக்கு அமைய இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள ளது. (05)

## பாடசாலைக்கு கெஹலியவின் பெயரை: வைப்பதற்கு ஆசிரியர் சங்கம் எதிர்ப்பு



கல்வி அமைச்சின் சுற்றறிக்கையை மீறி, பாடசாலை ஒன்றிற்கு முன்னாள் அமைச்சர் கெஹலிய ரம்புக்வெலவின் பெயர் வைக்கப்பட்டுள்ளதாகவும் அதனை உடனடியாக நீக்குமாறு இலங்கை ஆசிரியர் சங்கம் வலியுறுத்தியுள்ளது.

கொழும்பில் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் ஜோசப் ஸ்டாலின் இவ்வாறு வலியுறுத்தியுள்ளார்.

இவ்விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில் -

கண்டி மாவட்டத்தின் குண்டசாலை பிரதேசத்தில் உள்ள பாடசாலைக்கு, முன்னாள் அமைச்சர் கெஹலிய ரம்புக்வெலவின் பெயர் வைக்கப்பட்டுள்ளது.

அந்த பெயரை உடனடியாக நீக்க வேண்டும். கல்வி அமைச்சின் சுற்றறிக்கையை மீறி இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது.

1996ஆம் ஆண்டு கல்வி அமைச்சால் வெளியிடப்பட்ட சுற்றறிக்கையின் பிரகாரம் உயிருடன் உள்ள ஒருவரின் பெயரை பாடசாலைக்கு பெயரிட முடியாது.

ஆனால் முன்னாள் அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்ல சமூகதத்திற்கு தவறான ஒரு முன்னுதாரணம்.

எனவே குண்டசாலை பிரதேசத்தில் உள்ள ஆரம்ப பாடசாலைக்கு கெஹலிய ரம்புக்வெல்ல ஆரம்ப பாடசாலை என பெயரிட்டுள்ளார்.

அதனை உடனடியாக நீக்குங்கள். குறிப்பாக உயிருடன் இருக்கும் ஒருவரின் பெயரை பாடசாலைகளுக்கு வைப்பதற்கு எதிராக அரசாங்கம் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும். - என ஜோசப் ஸ்டாலின் மேலும் குறிப்பிட்டார். (05)

## எமது கறுப்பு தினப் போராட்த்தை அரசியல்வாதிகள் திசை திருப்பினர்

'தங்களால் முன்னெடுக்கப்பட்ட கறுப்பு தினப் போராட்டத்தை அரசியல் வாதிகள் திசைதிருப்பியுள்ளனர்' என வலிந்துகாணாமல் ஆக்கப்பட்ட உறவுகள் சங்கத்தின் மட்டக்களப்பு மாவட்டத் தலைவி திருமதி அ.அமலநாயகி தெரிவித்தார்.

மட்டு. ஊடக அமையத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இதனை தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:

கடந்த 4 ஆம் திகதி இடம்பெற்ற கறுப்பு தின போராட்டத்தை வடக்கு கிழக்கு பல்கலைக்கழக மாணவர் ஒன்றியமும் கிழக்கு மாகாண வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் சங்கத்தினரும் சேர்ந்து, வடக்குக் கிழக்கு தழுவிய போராட்டமாக முன்னெடுத்திருந்தோம்.

இதன்போது எங்களுக்கு போராட்டத்தை நடத்த தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருந்தது. அதனால் நாங்கள் அடுத்த கட்டமாக போராட்டத்தை நடத்துவதற்காக மதகுருமார்களை ஒழுங்குபடுத்தியிருந்தோம். எனினும் முகநூலில் சாணக்கியனின் தலைமையில் குறித்த போராட்டம் முன்னெடுக்கப்பட்டிருந்ததாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதனை மக்களுக்குத் தெளிவூட்டவேண்டிய தேவை எனக்கு இருக்கின்றது.

எங்களுடைய போராட்டங்களை திசை திருப்புகின்ற வகையில் அரசியல்வாதிகளே அந்தப் போராட்டத்தை முன்னெடுத்தனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

நமது உணர்வுகளுடன் நமது உயிர்களுடன் விளையாடாமல் நமது உறவுகளைத் தேடும் பயணம். இது இந்தப் பயணத்திற்கு அனைவரும் ஓர் உந்து சக்தியாக இருக்க வேண்டும். அதை விடுத்து தங்களுடைய பெயர்களைத் தக்கவைத்துக் கொள்வதற்காக அல்லது தங்களை முன்னுரிமையாகக் காட்டுவதற்காக எம்மை அவமானப்படுத்தும் செயற்பாடுகளை யாரும் இறங்கக்கூடாது எனத் தெளிவாகக் கூறிக் கொள்ள விரும்புகின்றேன். - இவ்வாறு தெரிவித்துள்ளார. (05)

## மருதமுனை அல் - ஹம்றா மாணவருக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கிவைப்பு

(ஏ.எல்.எம்.ஷினாஸ்)

மருதமுனை அல்-ஹம்றா வித்தியாலய மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்களை வழங்கி வைக்கும் நிகழ்வு பாடசாலையின் அதிபர் எம். எம். முஹம்மட் நியாஸ் தலைமையில் நடைபெற்றது.

நாட்டின் 76 ஆவது தேசிய சுதந்திர தினத்தை முன்னிட்டு தெரிவு செய்யப்பட்ட ஒன்று தொடக்கம் தரம் ஐந்து வரை கல்வி பயிலும் தேவையுடைய மாணவர்களுக்கு கல்முனை ரஹ்மத் பவுண்டேஷன் அனுசரணையில் இந்த கற்றல் உபகரணங்கள் அடங்கிய பொதிகள் மாணவர்களுக்கு வழங்கி வைக்கப்பட்டன.

இந்த நிகழ்வில் கல்முனை மாநகர சபையின் முன்னாள் பிரதி முதல்வரும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் தேசிய ஒருங்கிணைப்பு செயலாளருமான ரஹ்மத் மன்சூர் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் அடங்கிய பொதிகளை வழங்கி வைத்து விசேட உரையையும் நிகழ்த்தினார்.

இந்த நிகழ்வில் முன்னாள் கல்முனை மாநகர சபை உறுப்பினர்களான ஏ.எல்.எம்.முஸ்தபா (ஷரீப்), எம்.எஸ். உமர் அலி, எம்.ஐ.எம். ராஜாப்டீன், ஆகியோரும் பெரியநீலாவணை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி ஏ.எஸ்.கே.வீரசிங்க, பாடசாலையின் அபிவிருத்தி சங்க உறுப்பினர்கள், பாடசாலை நலன் விரும்பிகள், பிரதி அதிபர்கள், உதவி அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், பகுதி தலைவர்கள், பெற்றோர்கள், ஊர் பிரமுகர்கள் எனப் பலரும் கலந்து சிறப்பித்தனர்.

இதன் போது பாடசாலையின் இணைப்பாடவிதான செயற்பாடுகளில் திறமைகளை வெளிப்படுத்திய மாணவர்களுக்கு சான்றிதழ்கள் மற்றும் நினைவுச் சின்னங்களும் அதிதிகளால் வழங்கி பாராட்டி கௌரவிக்கப்பட்டனர். (05)

## புற்று நோய்க்கான மருந்துகளை பெற்றுக்கொள்ள புதிய ஒப்பந்தம்

*இலங்கையில் புற்று நோயாளர்களின் சிகிச்சைக்குத் தேவையான 13 அத்தியாவசிய மருந்துப் பொருள்களை சுகாதார அமைச்சுக்கு வழங்குவதற்கான ஒப்பந்தமொன்று சுகாதார மற்றும் கைத்தொழில் அமைச்சர் ரமேஷ் பத்திரன தலைமையில் இடம்பெற்றது.*

*அமெரிக்க தொண்டு நிறுவனத்துடன் இந்த ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்பட்டுள்ளன.*

*சுகாதார அமைச்சின் செயலாளர் பாலித மஹிபால மற்றும் அமெரிக்க தொண்டு நிறுவனத்தின் இயக்குநர் ஆகியோர் இந்த ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளனர்.*

*இவ்வாறு வழங்கப்படுகின்ற மருந்துகளின் பெறுமதி சுமார் ஒரு மில்லியன் அமெரிக்க டொலர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.*

*முதற்கட்டமாக சுகாதார அமைச்சுக்கு வழங்கப்பட்ட இந்த அத்தியாவசிய புற்றுநோய் மருந்துகள் ஒரு வருடத்திற்கு புற்று நோய் சிகிச்சைக்கு போதுமானது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.*

*அத்துடன் இரண்டாவது கட்டத்தின் கீழ், அடுத்த சில மாதங்களில் நாட்டிற்குத் தேவையான மற்றுமொரு மருந்துப் பொருள்களை விநியோகிக்க அமெரிக்க நிறுவனம் திட்டமிட்டுள்ளது.*

*இதேவேளை நாட்டு மக்களுக்கு முதன்மை, இரண்டாம் நிலை மற்றும் மூன்றாம் நிலை சேவையாக சிறந்த சுகாதார சேவையை அரசாங்கம் வங்கி வருவதாக சுகாதார மற்றும் கைத்தொழில் அமைச்சர் ரமேஷ் பத்திரன இதன்போது தெரிவித்துள்ளார்.*

*இதற்கு சர்வதேச அங்கீகாரம் கிடைத்துள்ளதாகவும், இலங்கையில் சிறந்த சுகாதார சேவையைப் பேணுவதற்கு அனைத்து சுகாதார ஊழியர்களும் அர்ப்பணிப்புடன் செயற்படுகின்றனர் எனவும் அமைச்சர் மேலும் குறிப்பிட்டார். (05)*




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 08.02.2024இல் வெளியிடப்பெற்றது.